18 வது வருடத்தில்
விளம்பரம் TM
VLAMBARAM TM
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 18 | பாலம் 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2008

# இலங்கையை எச்சரிக்கிறது சீனா

சிறீலங்காவுக்கான படைத்துறை உதவிகளை நிறுத்தப் போவதாக சீனா எச்சரித்துள்ளது. மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை இந்தியாவின் “கெயன்” நிறுவனமும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் செய்துகொண்ட உடன் படிக்கையை அடுத்தே சீனா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

சிறீலங்காவில் எண்ணெய் வள ஆய்வுப் பணி-களை சீனாவிடம் கையளிப்பதற்கே முன்னர் இலங்கை இணங்கியிருந்த நிலையில், இந்திய நிறுவனத்திடம் இந்தப் பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளதை அடுத்தே சீனா இந்த முடிவைத் தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு பீஜிங்கால் இலங்கைக்கு வழங்கப்பட்ட போர் உதவிகள் 37.6 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்தன. இதன்மூலம் இலங்கைக்கு அதிகளவான உதவி-களை வழங்கும் நாடான ஜப்பானைவிட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கூடுதலான உதவிகளை சீனா வழங்கியிருந்தது.

இதற்கும் மேலதிகமாக நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் உள்ளிட்ட பாரிய திட்டங்களையும் சீனா இலங்கையில் முன்னெடுத்துவருகிறது. இதனைக் கருத்தில்கொண்டு மன்னார் எண்ணெய் வள ஆய்வுகளை சீனாவுக்கு வழங்க இலங்கை தீர்மானித்திருந்தது.

இதனையடுத்து இந்தியா இதனைத் தடுத்து நிறுவனத்துவற்காக அண்மையில் இந்திய அதியுயர் அதிகாரிகள் சிறீலங்காவுக்கு பயணம் செய்திருந்ததை அடுத்தே எண்ணெய் வள ஆய்வு தொடர்பாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் இலங்கையின் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வே தேவை. அதுவே நிரந்தரமானது. ஆகையால் அரசியல் தீர்வைக் காண்பதற்கான நடைமுறைகளை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும். இவ்வாறு இன்று இலங்கை வந்துசேரும் பிரிட்டிஸ் வெளிவிவகார அமைச்சர் மனோச் பிறவுண் பிரபு இங்குள்ள உயர்மட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்து வலியுத்துவார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் வெளிவிகார மற்றும் பொது நலவாய அலுவல்கள் அமைச்சர் மனோச் பிறவுண் பிரபு நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வருகிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அரசாங்கத் தலைவர்களையும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களையும் அமைச்சர் பிறவுண் சந்தித்துப் பேசவுள்ளளார். அப்போது போரை நிறுத்தி அரசி யல் தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன் வைப்பார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் எதிர்வு கூறுகின்றன.

பிரிட்டன் இலங்கை தொடர்பான பல விடயங்கள் குறித்து கவலைகொண்டுள் ளது. இலங்கையின் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு மாத்திரமே நிரந்தரமானது எனக் கருதும் அந்த நாடு, இவ்வாறான தீர்வை காண்பதற்கான அரசி யல் நடைமுறைகளை துரிதப்படுத்தவேண்டுமென கருதுகின்றது என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் ஸ்தம்பித மடைந்துள்ளமை, காணாமற் போதல், ஆள்கடத்தல் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான துன்புறுத்தல் போன்றவை பற்றியும் பிரிட்டன் அக்கறை கொண்டுள்ளது. இவை கண்டிக்கப்பட வேண்டிய விடயங்கள் என அந்த நாடு கருதுகின்றது அதனால் அவை குறித் தும் அரசுத் தலைவர்களிடம் பிரிட்டிஷ் அமைச்சர் எடுத்துக் கூறுவார் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அரசியல் பன்முகத்தன்மையை ஏற்படுத்து வதற்காக இலங்கை மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தாவிட்டால், ஜி.எஸ். பிவர்த்த சலுகை நிறுத்தப்படும் அபாயம் குறித்தும் அமைச்சர் இலங்கையை எச்சரிப்பார் எனவும் கூறப்படுகிறது.

சிறிலங்காப் படையினருடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைக் குழுவின் தலைவர் பிள்ளையானுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்தே லண்டனிலிருந்து கருணா மீண்டும் சிறிலங்காவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் இதன் பின்னணியில் சிறிலங்கா அரசின் பல திட்டங்கள் ஒழிந்துள்ளன என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது. இவை தொடர்பாக தெரியவருவதாவது:

கிழக்கு கள நிலைமைகளில் கைதேர்ந்தவர் என்ற நம்பிக்கையுடனும் தமது உத்தரவுகளுக்கு கட்டுப்படுபவராக இருப்பார் என்ற எண்ணத்துடனும் கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக சிறி லங்கா அரசால் நியமிக்கப்பட்ட பிள்ளையான், பதவியைப்பெற்றவுடன் தனது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் தனக்கு ஏகபோக அதிகாரம் அளிக்கப்பட்டு அது தொடர்பான நிதி விவகாரங்களையும் தானே கையாளப்போவதாக அரசுக்கு அறிவித்திருக்கிறார். இது சிறிலங்கா அரசின் எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்கும் பாரிய அடியாகிவிட்டது.

அதேவேளை, சிறிலங்கா அரசின் இன்னொரு மிக முக்கியமான கோரிக்கைக்கு பிள்ளையான் மறுப்பு தெரிவித்தமை அரசுக்கு பிள்ளையான் மீது கடும் சீற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. அதாவது, சிறிலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணிக்கு பிள்ளையான் குழுவில் உள்ள இருநூறு பேரை அரசு கோரியிருந்தது.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பிள்ளையான், கிழக்கு அபிவிருத்திக்காகவே தனது குழு முழுமையாக செயற்படுமே தவிர, விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடவோ, வடக்கு மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவோ மாட்டாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறிவிட்டார்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

றிப்ளக்ஸ் REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9874
BAY & BLOOR (BAY SUBWAY)
OPEN 7 DAYS


All Epson ink catridges $7.99
All Brother ink Catridges $8.99
All Canon (non-chipped) ink $7.99
HP Laserjet Q2612A (12A) $49.99
Mention This code and save an additional $5.00 : 761605
A1 Ink Rainbow Inc.
T: 416.286.0333
F: 416.286.0334
• Compatible Toner & Ink
• Unbeatable prices
• 100% Satisfaction Guaranteed
• Expert Advice & Services
• Free Delivery
LEXMARK XEROX Canon OKI


Das Narayanasamy
Cell: 416-543-6614
CENTURY

Buy & Sell Residential and Commercial

Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
HomeLife/GTA Realty Inc.
Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 2Y3


கதிர்
GTA Square
SOLD OUT!
Only 12 units left
Middlefield & Finch

24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Don't Miss Out
HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto

Real Estate Broker
Call: 416-262-4176

HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

விலைவாசி உயர்வு. இதுதான் இப்போது உலகம் முழுவதும் பேசப்படுவது, இந்தியாவின் விலைவாசி உயர்வு 11.6 சதவீதம். ரஷ்யாவில் 15 சதவீதம். சீனாவில் 8 சதவீதம். வியட்நாமில் 25 சதவீதம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். கனடாவில் இன்னும் 3 சதவீதத்தை விலைவாசி உயர்வு தாண்டியதாக அறிவிக்கப்படவில்லை.

கனடாவில் நுகர்வோரின் நம்பிக்கை 13 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குக் குறைந்திருப்பதாக Conference Board of Canada தெரிவிக்கின்றது. 2000 பேர்களை தொலைபேசியில் ஜுன் மாதத்தில் கண்ட பேட்டியின் விளைவாக இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கனடியர்கள் தற்சமயம் கார், வீடு போன்ற பெரிய செலவை உண்டாக்கும் சொத்துக்களை வாங்கத் தயங்குகின்றார்கள் என்று இந்த ஆய்வு தெரிவிக்கின்றது. Bank of Canada நடத்திய சமீபத்திய ஆய்வின்படி மேற்கில் இருக்கும் பெரிய தொழில் நிறுவனங்கள் அடுத்த ஓராண்டுக்குள் வளர்ச்சியையும், வளமையையும் எதிர்பார்க்கின்றன. ஒன்ராரியோ, கியூபெக் போன்ற கிழக்கு மாநிலங்களில் இருக்கும் தொழில் நிறுவனங்கள், மேற்கைப் போன்று நம்பிக்கையுடன் இல்லை. ஆனால் எல்லாத் தொழில் நிறுவனங்களும், விலைவாசி உயர்வு கவலை தருவதாகக் கருதுகின்றன.

முன்பெல்லாம் விலைவாசியைக் கட்டுப்படுத்த உயர்ந்து வந்த கனடிய டொலர் பெருமளவுக்கு உதவியது. ஆனால் தற்சமயம் கனடிய டொலர் வீக்கமடைந்து வருகின்றது. இது மேலும் வீக்கமடையும் என்று றோயல் வங்கியின் அந்நியச்செலவாணி நிபுணர் ஜோர்ஜ் டேவிஸ் கருத்து வெளியிட்டுள்ளார். இதற்கு முற்றிலும் மாறான கருத்தை பாங்க் ஒஃவ் மொன்றியாலைச் (Bank of Montreal) சேர்ந்த சல் கட்டாரி என்ற பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளார். இவரின் கருத்துப்படி



**பெரி. முத்துராமன்**

கனடிய டொலர் வலுவடையும். குறிப்பாக உயர்ந்து வரும் எண்ணையின் விலையே கனடிய டொலரின் மதிப்பை உயர்த்தும் என்று இவர் நம்புகின்றார். இப்படி முன்னுக்கு பின் முரணான ஆய்வுகளுக்கு நடுவில் நாம் நினைவில் கொள்ள வேண்டியது கனடிய டொலரின் மதிப்பு உயர்ந்தால் உள்நாட்டில் உணவு மற்றும் இறக்குமதிப் பொருட்களின் விலைகளில் பெரிய அதிகரிப்பு இராது. இல்லையேல் விலைவாசி உயர்வு அதிகரிக்கும்.

இந்த விலைவாசி உயர்வைப் பற்றிய கவலைகளைப் பிரதிபலிப்பதாகவே உலகப்பங்குச் சந்தையும் உள்ளது. உலகப் பங்குச் சந்தையை அளவிட MSCI World Index பயன்படுத்தப்படுகின்றது. வளர்ச்சியடைந்த கனடா உள்ளிட்ட 23 நாடுகளில் ஒட்டு மொத்தப் பங்குச் சந்தையை இந்தக் குறியீடு அளவிடுகின்றது. இந்த குறியீடு, தொடர்ந்து வீழ்ச்சியடைந்த நிலையிலேயே 2008 காணப்படுகின்றது. MSCI World Index இன் 2008 க்கான குறியீடு முதல் மூன்று மாதங்களில் 9.5 சதவீதம் வீழ்ச்சியடைந்தது.

கனடாவை மட்டும் எடுத்துக் கொண்டால், முதன்முறையாக 2008 இல் பங்குச் சந்தைப் புள்ளிகள் மே மாதத்தில் 15000 ஐத் தொட்டது. இதை சதவீதத்தில் பார்த்தால் 8.4 சதவீத வளர்ச்சி. அந்தோ! இந்த வளர்ச்சி நீடிக்கவில்லை. இந்தக் கட்டுரை எழுதப்படும் சமயம் பங்குச்சந்தைப் புள்ளிகள் 13600 இல் இருந்தன. 2008 ஜுன் 30 வரை ஒப்பிட்டால் உலகப் பங்குச்சந்தைப் புள்ளிகள் 11.8 சதவீதமும், அமெரிக்கா 12.8 சதவீதமும், ஐரோப்பா 18.9 சதவீதமும், சீனா 48 சதவீதமும் வீழ்ச்சியடைந்திருந்தன.

செப்ரூபீன் என்ற CIBC பொருளாதார நிபுணரைப் பற்றி முன்பே எழுதியிருக்கின்றோம். இவர் கனடாவில் பங்குச் சந்தை விலைகள் வெகுவாக உயரும் என்று முன்பு கருத்துத் தெரிவித்திருந்தார். இவர் தன்னுடைய முந்தைய கருத்தை இப்போது மாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் கனடியப்பங்குச்சந்தையில் பெரிய வளர்ச்சியை இவர் தற்சமயம் எதிர்பார்க்கவில்லை.

இவர் பங்குச் சந்தையில் 53 சதவீதமும், நீண்டகால நிலையான வைப்புக்களில் 36 சதவீதமும் ரொக்கமாக 11 சதவீதமும் தற்சமயம் முதலீடுகளை வைத்திருக்க பொதுவில் அறிவுரை கூறியுள்ளார்.

தற்போதைய இந்தக் குழப்பமான பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ற அறிவுரை என்னவென்றால் அதிகபட்சம் ஏறத்தாழ சரிபாதி தொகையைப் பங்குச் சந்தை முதலீடுகளிலும், மீதியை நீண்ட கால நிலையான வைப்புகளிலும், ரொக்கமாகவும் வைத்திருப்பதே ஆகும். இந்த அறிவுரைக்கு ஏற்ப ஸ்கோஷியா வங்கியில் இருக்கும் ஒரு மிகச் சிறந்த மியூச்சுவல் பண்ட் ஸ்கோஷிய டைவர்சிற்றி மன்த்லி இன்கம் பண்ட் (Scotia Diversities monthly income fund) ஆகும்.

இந்த மியூச்சுவல் பண்ட் ஏறத்தாழ சரி பாதியைப் பங்குச்சந்தைப் பங்குகளிலும், மீதியை அரசாங்கப் பத்திரங்களிலும், நீண்டகால வைப்புக்களிலும், ரொக்கமாகவும் கொண்டுள்ளது. ஏற்ற இறக்கங்கள் இந்த மியூச்சுவல் பண்டிலும் இருக்கும். ஆனால் பெரிய ஏற்றமோ, இறக்கமோ இருக்காது. ஐந்தாண்டு கால முடிவில் வங்கி நிரந்தர வைப்புக்களில் கிடைக்கக்கூடியதை விட அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால் இதை உறுதி செய்ய முடியாது. அதிக ரிஸ்க் எடுக்க விரும்பாதவர்களுக்கும், முதியவர்களுக்கும் இந்த மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்வது பொருத்தமானதாகும்.

உங்கள் முதலீடுகள் பற்றி இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010



# இலங்கையை எச்சரிக்கிறது...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இது விடயத்தை நேரடியாகக் கையாண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபாய ராஜபக்சவுக்கு பிள்ளையானின் நடவடிக்கைகள் சந்தேகத்தை உண்டு பண்ணின. இதை அடுத்து, விடுதலைப் புலிகளின் கையாளாக பிள்ளையான் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் அரசு தரப்புக்கு ஏற்பட்டது.

“புலிகளுக்கு பாடம் கற்பிக்க கருணாவைப் பிரித்து, பின்னர் கருணாவுக்குப் பாடம் புகட்ட பிள்ளையானைப் பிரித்து காரியங்களை ஒப்பேற்றிவிட, தற்போது அரசுக்கே பிள்ளையான் ஆட்டம் காட்டுகிறாரோ? இவருக்கு பாடம் கற்பிக்க திரும்பவும் கருணாவை கூப்பிடுகிறேன் பார்” என்று சீறிய கோத்தாபாய ராஜபக்ச மேற்கொண்ட நடவடிக்கையே கருணாவை மீள அழைத்த நாடகம். தற்போது, நாடு திரும்பியுள்ள கருணாவை வைத்து, இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணிக்கு ஆட்களை திரட்டுவதே



அரசின் பிரதான நோக்கமாகவுள்ளது.

அம்பாறை மற்றும் கிழக்கின் இதர பகுதிகளில் உள்ள கருணாவின் குழுவினரை ஆழ ஊடுருவும் அணிக்கு திரட்டும் நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்குமாறு கருணாவுக்கு அரசு தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் வாகரைப் பகுதியில் மாவீரர் துயிலும் இல்லத்தை முன்னர் படையினர் இடிக்கும்போது கருணா, அது விடயத்தில் மௌனம் சாதித்தமை முதல் பலவிடயங்கள், தாம் என்ன சொன்னாலும் செய்வார் என்ற நம்பிக்கையை கருணா மீது சிறி லங்கா அரசுக்கு ஏற்படுத்தியிருந்தது.

ஆகவே, தற்போது தாம் மேற்கொண்டுள்ள இந்த ஆழ ஊடுருவும் அணிக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைக்கும் கருணா நிச்சயம் உதவுவார் என்று அரச திடமாக நம்புகிறது.

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# எரியும் நினைவுகள்

இயக்கம், ஒளிப்பதிவு: சோமீத்ரன்
படத்தொகுப்பு: கிருஸ்ணா
இசை: கண்ணன், சங்கர்
தயாரிப்பு: நிகரி
கால அளவு: 49 நிமிடம்

ஈழத்தமிழர்கள் அரசியல் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்த ஒரு வரலாற்றின் முதல் பதிவு இது.

உலகின் பல முனைகளிலும் ஆங்காங்கே நடந்துவரும் உரிமைப் போராட்டங்கள் அனைத்திலும் பெரிய ஒரு நெடியப் போரின் மௌன சாட்சியாக விளங்கும் ஒரு நூலகத்தின் எரியும் நினைவுகள் இது. இலங்கைத் தமிழர்கள் உரிமைப் போரின் ஒரு அரசியல் குறியீடாகவும், நீங்காத வடுவாகவும் விளங்கும் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்தான் அந்த நூலகம். 1931ம் ஆண்டு செல்லப்பா என்பவரது ஒரு கடிதத்தில் தொடங்கும் முயற்சி, 800 புத்தகங்களுடன் ஒரு நூலகமாக வடிவெடுத்த ஆரம்பகால வரலாற்றில் இருந்து, இன்று வரைக்குமான நூலகத்தின் வலி மிகுந்த கதையை திரைப்பட மொழியின் பல்வேறு சாத்தியங்களையும் பயன்படுத்தி சொல்கிறது இந்த ஆவணப்படம்.

தீப்பற்றி எரியும் புத்தகத்துடனும், "புத்தர் யாழ்ப்பாண நூலக வாயிலில் சுடப்பட்டு எரிக்கப்பட்டார்..." எனத் தொடங்கும் எம்.ஏ.நுகுமானின் கவிதை வரிகளுடனும் தொடங்கும் ஆவணப்படம் முதல் காட்சியிலேயே நம் மனதையும் உணர்ச்சிகளையும் பதைபதைக்கச் செய்கிறது. சிறிலங்கா ஆட்சியாளர்களால் 1981ம் ஆண்டு எரியூட்டப்பட்டது, அதற்கு முன்னும் பின்னும் யாழ்ப்பாணத்தில் நிலவிய பதட்டமான சூழ்நிலைகள், சிதைவுற்ற நூலகத்தின் காட்சிகள், கோணங்கள், அங்கு பணியாற்றியோரின் வாக்குமூலங்கள், பத்திரிகை நறுக்குகள், உரைகள், கறுப்பு வெள்ளையிலான பழைய நேர்காணல்களின் பதிவுகள், வரைபடங்கள் என முன்பின்னாக நகரும் காட்சிகள் நம்மை மேலும் பதட்டத்துக்கு உள்ளாக்குகின்றன. காட்சிகள் கட்சிதமாக தொகுக்கப்பட்டுள்ளது இதன் சிறப்பு. தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் என நான்கு மொழிகளில் இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## - கிருஸ்ணன் -

யாழ்ப்பாணம் நூலகம், ஈழத் தமிழர்கள் பண்பாட்டின் பெருஞ்சொத்தாகவும் கல்விப்புலமையின் குறியீடாகவும் விளங்கியது. அதனாலேயே தமிழர்களின் மேன்மையை சீர்குலைக்க எண்ணிய சிங்கள வெறியர்கள், நூலகத்தைச் சிதைக்கும் வெறிச்செயலில் ஈடுபட்டார்கள். நூலகம் எரியூட்டப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் வெளிவந்திருக்கும் இந்தப் படம் அதற்கு பின்னால் உள்ள அரசியலை மிகத் தெளிவாக எடுத்துக்கூறுகிறது. இது ஒரு வரலாற்று தேவையும்கூட. சரியாக 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், நூலகம் எரிக்கப்பட்ட பிறகு பிறந்த தலைமுறைக்கு அது பழங்கால வரலாறு மட்டுமே. ஆனால், அப்படி ஒரு பழைய வரலாறாக சுலபத்தில் மறந்துவிட முடியாது. எதிர்காலத்திலும் துடைக்கப்பட முடியாத நீங்காத வடு என வரும் தலைமுறைக்கும் நூலகத்தின் கதையைச் சொல்கிறது இந்த ஆவணப்படம். அந்தவகையில் எண்பதுகளில் வாழ்ந்த, உணர்ந்த ஒரு தலைமுறையின் எரியும் நினைவுகளை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்லும் பணியை கனகச்சிதமாக செய்துள்ளது இந்த ஆவணப்படம்.

உதாரணமாக, இந்த ஆவணபடத்தை இயக்கியுள்ள சோமீத்ரன், நூலகம் எரிக்கப்பட்டு பத்தொன்பது நாட்களுக்குப் பிறகு பிறந்தவர். "என் தலைமுறைக்கு யாழ் நூல் நிலையத்தை காணும் வாய்ப்பு ஆரம்பத்தில் கிடைத்த போதெல்லாம், அது ஒரு நூலகம் என்ற புரிதல் அற்று இருந்தது. பின்னர் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னரே அது குறித்தும் அதன் அரசியல் வரலாறு குறித்தும் அறிந்துகொள்ள முடிந்தது. ஒரு பத்திரிகையாளராக யாழ்ப்பாணத்தில் இருந்த காலங்களில் நான் கேள்விப்பட்டவைகள் எனக்கு அதிர்ச்சியை அளித்தன. அவை எதுபற்றியும் அறியாமல், எங்கள் தலைமுறை அந்த நூலகத்தின் சாம்பல்களில் தவழ்ந்தது என்றும் சொல்லலாம். தமிழருக்கெதிரா மிகப்பெரும் வன்முறை நூலக எரிப்பு. அதை நான் ஒரு படுகொலையாகவே பார்க்கின்றேன் திட்டமிட்ட படுகொலை. எனவேதான், யாழ்ப்பாணம் நூலகம் பற்றி ஒரு ஆவணப்படம் தயாரிக்கவேண்டிய தேவையை உணர்ந்து செயல்பட்டேன்" என்கிறார் சோமீத்ரன்.




"நூலகம் எரிக்கப்பட்டதுதான் அரசியல் என பலர் நினைக்கிறார்கள். அது உண்மை. ஆனால், அதையும் தாண்டி நூலகமே ஒரு அரச-்யிலாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. 1981இல் நூலகம் எரிக்கப்படுகிறது. தமிழ்
தேசியத்துக்கு எதிரான சிங்கள அரசின் நடவடிக்கைகளில், யாழ் நூலகம் தமிழ் தேசியத்தின் ஒரு வடிவமாகவும் குறியீடாகவும் பார்க்கப்பட்டது. இதன் மூலம் தேசிய அரசியலிலும் தமிழர்களின் பிரதிநிதியாக நூலகம் உருவெடுத்தது. இன்னொரு பக்கம், கோட்டை முற்றுகைச் சமரின் போது போராளிகளின்
காப்பரணாகவும் ஒரு போராளியாக கோட்டைச் சமரின் ஒரு குறியீடாகவும் யாழ் நூலகம் விளங்கியதையும் குறிப்பிட வேண்டும்" என்கிறார் சோமீத்ரன்.

அந்தவகையில் இந்த ஆவணப்படம், ஒரு வரையறைக்கு உட்படாத ஒட்டுமொத்த தமிழர்களுக்கான வரலாற்று அழிவினைப் பற்றியும் பேசுகிறது. அதே நேரத்தில் இது தமிழர்களையும் தாண்டி சிங்களவர்களுக்கான இழப்பு என்பதையும் பதிவு செய்திருக்கிறது. நூலக வரலாறு, அதன் எரிப்பு தொடர்பான விபரங்கள், நேரடிச் சாட்சிகளின் தகவல்கள் என எல்லாவற்றையும் சேர்த்திருக்கிறார்கள். 1984இல் நூலகம் திருத்தப்பட்டதும் மீண்டும் 85இல் இடிக்கப்பட்டதும், எரிக்கப்பட்டதுக்கு பிறகான 27 வருட காலத்தில் மக்களுக்கும் நூலகத்திற்கும் போருக்குமிடையிலான ஊடாட்டத்தையும் பதிவு செய்கிறது. குறிப்பாக நூலக மீள் புனரமைப்புக் குறித்து வரும் விவாதங்கள் மிக முக்கியமானவை. "நூலகம் எரிக்கப்பட்டது ஒரு அரசியல் என்றால், அது புனரமைக்கப்பட்டதும் ஒரு அரசியல்தான். சிங்கள தேசியம் ஒரு காலத்தில் செய்த கோரப் படுகொலையின் அடையாளத்தை இல்லாதொழிப்பது சந்திரிகாவிற்கு அவசியமாயிருந்தது. எனவேதான், அதை புனரமைக்க திட்டமிட்டார். ஆனால், துரதிஸ்டவசமாக அப்போதைய தமிழ்க்கட்சிகள் இது குறித்து அலட்டிக்கொள்ளாத காரணத்தினாலும், இது குறித்து யாழ்ப்பாண மக்கள் தமது கருத்தை வெளிப்படையாக சொல்லுவதற்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருந்ததாலும் நூலகம் புனரமைக்கப்பட்டது" என்பதை உணர்த்தும் படம், புனரமைக்கப்பட்டு வெள்ளையடிக்கப் பட்ட ஒரு கல்லறையாக நிற்பதை பதிவு செய்கிறது. "இது எங்களுக்கு ஒரு பெரிய இழப்புதான். வரும் தலைமுறையினருக்கு எங்கள் உரிமைப்போரின் வடுக்களைச் சொல்லும் காட்சிப் பதிவுகளில் மிக முக்கியமான ஒன்றை நாங்கள் இழந்திருக்கிறோம்" என்கிறார் யாழ்ப்பாணத்தில் வாழும் ஓவியர் சனாதனன்.

சென்னையில் திரையிடப்பட்ட இந்த ஆவணப்படத்தைப் பார்த்த பார்வையாளர்கள் அனைவரும் உணர்ச்சி வசப்பட்டார்கள். பலரும் கண்ணீர் சிந்தி அழுதது நெகிழ்ச்சியான காட்சியாக இருந்தது. இந்த திரையிடலில் பேசிய பாலுமகேந்திரா, "கடந்த என் அறுபத்தைந்து வருட கால சினிமா வாழ்க்கையில் என் மக்களுக்காக நான் என்ன செய்தேன் என சிந்தித்து பார்க்கின்றேன். நான் யாழ்ப்பாணம் நூலகத்தைப் பயன்படுத்தியவன், அதனை அனுபவித்தவன். எம் மக்களின் உரிமைப் போராட்டத்தின் வடுவாகவும் மிகப் பெரிய அரசியல் குறியீடாகவும் இந்த நூலகம் இருக்கும் நிலையில், அதை வரும் தலைமுறையினருக்கு எடுத்துக்கூறும் வகையில் நான் ஒரு ஆவணப்படமோ, திரைப்படமோ இயக்கி இருக்கவேண்டும். ஒரு திரைப்படக் கலைஞனாக இந்த சமூகத்துக்கு நான் செய்யவேண்டிய கடமை இது. ஆனால், நான் செய்யவில்லை. ஆனால், நூலகம் எரிக்கப்பட்டபோது பிறந்த குழந்தை அது தொடர்பான ஆவணப்படத்தை எடுத்து என் கைகளில் தரும் போது என் இயலாமையை உணர்கிறேன்" என்றார்.

கடந்த இரண்டு வருடங்களில் தகவல் சேகரிப்பும் பொருளாதார சேகரிப்பும் எனக் கடுமையான முயற்சிக்குப் பின்னரே இந்த ஆவணப்படத்தை சாத்தியமாக்கி இருக்கிறார்கள் நிகரி குழுவினர். "2006 மே மாதம் இந்த ஆவணப்படத்துக்கான படப்பிடிப்புகளைத் தொடங்கினோம். அப்போது மீண்டும் தீவிர யுத்தம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து விட்டிருந்தது. இதனால், யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு இருந்த அச்சுறுத்தல்கள் காரணமாக என்னால் பகிரங்கமாக பணியாற்ற முடியாதிருந்தது. பிஸ்கட் பெட்டிக்குள் கமெராவை மறைத்து வைத்து எடுத்துச் சென்ற சம்பவங்களும் உண்டு. கொழும்பிலிருந்து படப்பிடிப்பாளர் ஒருவரை அழைத்துச் செல்ல ஒழுங்கு செய்திருந்த போதும் இறுதி நேரத்தில் அவரால் வரமுடியாமல் போனது. இதனால் படப்பிடிப்பினையும் நானே செய்து கொண்டேன். யாழ் நூலகம் இராணுவத்தின் அதிபாதுகாப்பு வலயமொன்றினில் அமைந்திருக்கின்றது. முட்கம்பி வேலிகளும் சோதனைச் சாவடிகளும் நிறைந்த பிரதேசம் அது. அப்பிரதேசத்தில் படம் பிடிப்பது எவ்வளவு சிரமம், எவ்வளவு உயிருக்கு ஆபத்தான செயல் என்பது ஒரு யாழ்ப்பாணத்தவராலேயே உணரக்கூடியது. ஆனால் அதைவிட ஆவணத்திற்குத் தேவையான பழைய காட்சிகளை பெறுவதில் இன்னும் சிரமமிருந்தது. அதற்காக நிறைய காலம் காத்திருக்க வேண்டியேற்பட்டது. இயல்பாகவே ஆவணப்படுத்தும் சிந்தனையற்ற யாழ்ப்பாணச் சூழலில் நூலகம் தொடர்பான தகவல்களைப் பெறுவது பெரும் சிரமமாயிருந்தது." என்கிறார் சோமீத்ரன்.

ஆனாலும், ஆவணப்படம் முடியும்போது ஒரு நிறைவு ஏற்படாமல் ஏதோ ஒரு குறை இருப்பது போன்ற உணர்வே மிஞ்சுகிறது. இயக்குநர் சோமீத்ரனும் இதனை ஒப்புக்கொள்கிறார். "இந்த ஆவணப்படம் எவ்வாறு இருக்கவேண்டும் என நான் ஆரம்பத்தில் நினைத்திருந்த அளவுக்கு என்னளவில் இது வரவில்லையென உணர்கிறேன். இதற்கு தகவல்களைத் தேடுதலிலும் பொருளாதாரத்தை தேடுதலிலும் ஏற்பட்ட சிரமங்களும் முக்கியக் காரணம். எனினும் இது ஒரு முதல் வரைபு என்கின்ற வரையில் நான் திருப்தியுறுகிறேன்" என்கிறார் அவர்.

உண்மைதான். ஈழத்தமிழர்கள் அரசியல் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்த ஒரு வரலாற்றின் முதல் பதிவு என்கின்ற வகையில் முக்கியமான வரலாற்று ஆவணம் இந்தப் படம்!


உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# விரும்பிய வண்ணம் வாழ்க்கை



சத்குரு ஜக்கி வாசுதேவ்

கடவுள் என்று நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்களோ அவர்தான் எல்லாவற்றையும் படைத்தவர். சரிதானே? படைத்தவர் என்னும் கற்பனை ஏன் உங்களுக்கு வந்தது? ஏனெனில் எங்கிருந்து வந்தோம் என்று தெரியாமலே நீங்கள் இங்கே வந்து உதித்தீர்கள். அதற்கு முன்பிருந்தே இங்கு படைத்தல் முழு வேகத்தில் இருந்தது. நீங்கள் இங்கு வருவதற்கு முன்பாகவே பலவும் படைக்கப்பட்டு விட்டன. எனவே படைப்பவர் என்று ஒருவர் இருக்கவேண்டுமென நீங்கள் நினைத்துக் கொண்டீர்கள். இல்லையா? நிச்சயமாக இந்த கிரகத்தையும் இந்த சூரியனையும் இந்த சந்திரனையும் நீங்கள் படைக்கவில்லை. அவையெல்லாம் முன்பே படைக்கப்பட்டுவிட்டன. ஆனால் தற்போது உங்கள் வாழ்க்கையில் அனைத்தும் கடவுள்தான் செய்து கொண்டிருப்பதாக பேசுகிறீர்கள்.

நான் பேசுவது உங்களைக் காயப்படுத்தலாம். ஆனால் காயப்பட நீங்கள் விருப்பத்துடன் இருக்கவேண்டும். இன்றிரவு என்ன சாப்பிட வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்கிறீர்களா கடவுள் தீர்மானிக்கிறாரா? நீங்கள்தானே தீர்மானிக்கிறீர்கள். ஆனால் இப்போது நீங்கள் கடவுளின் திட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். யாரோ பசியாக இருக்கிறார்கள் என்றால் இது எல்லாம் கடவுள் செயல் இப்போது கடவுளின் விருப்பம் அப்படித்தான் இருக்கிறது என்றெல்லாம் கூறுவீர்கள். ஆனால் நீங்கள் பசியாக இருந்தால் உங்கள் வயிறு காலியானால் அதை எப்படி நிரப்புவது என்று நீங்களாக திட்டமிட ஆரம்பிப்பீர்கள் இல்லையா? உங்கள் வாழ்க்கை வசதியாக இருக்கும்போது வறட்டு வேதாந்தத்தில் ஆழ்ந்துவிடுவீர்கள்.

ஆன்மீகப் பாதையில் அடியெடுத் வைப்பவர்கள் ஏன் அனைத்தையும் துறந்துவிட்டு அப்பாதையில் காலடி வைக்கிறார்கள் என்றால் வாழ்க்கையின் அடித்தளத்தில் நிற்கும்போதுதான் வாழ்க்கையை அதன் உண்மையான ரூபத்தில் புரிந்துகொள்ளத் தொடங்குவீர்கள். அதுதான் உண்மையான காரணம். நீங்கள் தெருவில் ஆண்டியாக நடந்தால்தான் உங்களை நீங்கள் உணர்வீர்கள் என்பதல்ல காரணம். எதற்குமே வசதியற்று இருக்கும்போதுதான் நீங்கள் ஒவ்வொன்றையும் முழுமையாகப் புரிந்துகொள்வீர்கள். ஆக உங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்வதென்பது உங்கள் திட்டமா கடவுள் திட்டமா? அது உங்கள் திட்டம். நீங்கள் படித்துப் பட்டம் வாங்கியது நீங்களாகத்தானே? கடவுள் உதவியுடன் தேர்வில் வெற்றி பெறுவீர்களா? அல்லது நீங்களாகப் படித்து வெற்றி பெறுவீர்களா? நீங்களாகப் படித்துத்தான். அதே போலத்தான் உங்கள் ஒவ்வொரு செயலும் நடக்கிறது. கடவுளை ஒரு இன்ஸ்யூரன்ஸாக மட்டும் வைத்திருக்கிறீர்கள். ஏதாவது தவறாகப் போகும்போது கடவுளே நான் பிரீமியம் கூட செலுத்தியிருக்கிறேன் என்கிறீர்கள்.

வாழ்க்கையில் உங்களது ஒரே பிரச்சினை என்னவென்றால் நீங்கள் நினைக்கும்படியாக வாழ்க்கை நடக்கவில்லை என்பதுதான். இல்லையா? அது ஒன்றுதான் உங்கள் பிரச்சினை. அதே மூச்சில் நான் கடவுளை நம்புகிறேன் என்றும் சொல்கிறீர்கள். கடவுள் மேல் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உங்கள் வாழ்க்கை உங்கள் கடவுள் விரும்பும் வண்ணம் நடக்கிறது என்றுதானே பொருள்! நீங்கள் மேலும் மகிழ்ச்சியாகத்தானே இருக்கவேண்டும்! ஆனால் நீங்கள் அப்படியிருக்கவில்லை. உங்கள் பிரச்சினை நீங்கள் விரும்பியவண்ணம் வாழ்க்கை நடக்கவில்லை என்பதுதன். நீங்கள் கடவுளை நம்புபவராக இருந்தால் கடவுள் விரும்பும் வழியில் வாழ்க்கை நடக்கிறது. அது இன்னமும் சிறந்ததுதானே? அவருடைய வழி உங்கள் வழியை விட சிறந்ததாகத்தானே இருக்கமுடியும்? ஆனால் உண்மை அப்படியல்ல. நீங்கள் உங்களையே மிகவும் ஏமாற்றிக்கொள்கிறீர்கள்.

நீங்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டால் சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டால் மனதில் கேள்வி எழுந்துவிட்டால் அங்கு பக்தி நிகழாது ஏமாற்றுதல்தான் நடக்கும். உங்கள் மனதின் அனைத்து அம்சங்களையும் நீங்கள் அணுகாவிட்டால் பக்தி என்ற பெயரில் உங்களையே நீங்கள் ஏமாற்றிக்கொள்வீர்கள். கடவுள் இந்த உலகத்தை உங்கள் ஆலோசனைப்படி நடத்திச் செல்லவேண்டும். இப்போதைக்கு பக்தி என்பது அப்படித்தானே இருக்கிறது? ஒவ்வொருநாளும் காலைப் பிரார்த்தனை அப்படித்தானே இருக்கிறது? உலகத்தை எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்று அவருக்கு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது பக்தி இல்லை, ஏமாற்றுவேலை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது பக்தி என்ற பெயரில் நடக்கிறது.

பக்தன் (devotee) என்னும் வார்த்தையே அழிவு (dissolution) என்னும் சொல்லிலிருந்து வந்ததுதான். ஒரு பக்தருக்கு அவருக்கென்று ஒரு நோக்கம் கிடையாது. பக்தனின் ஒரே நோக்கம் பக்தியிலேயே கரைந்து போவதுதான். அப்போதுதான் நீங்கள் பக்தராகிறீர்கள். ஒரு பக்தர் என்றால் அவருக்கென்று வாழ்க்கையில் எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. அவர் கரைந்துபோக விரும்புகிறார் வாழ விரும்பவில்லை இங்கிருக்கவே விரும்பவில்லை பக்தியிலேயே கரைந்துபோக விரும்புகிறார். ஆனால் உங்கள் விடயத்தில் அது உண்மையில்லை. நீங்கள் நன்கு வாழ விரும்புகிறீர்கள். செயல்கள் செய்வதில் ஆர்வமாயிருக்கிறீர்கள். வாழ்க்கையை எப்படி நடத்திச்செல்வது என்பதையெல்லாம் தீர்மானித்து வைத்திருக்கிறீர்கள். அதை நடத்தித் தருவதற்கான நாணயம் போன்றுதுதான் கடவுளை நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இது பக்தி அல்ல ஏமாற்று வேலை.

# நேர்மை தரும் சிறப்பு



இறைவனைப் போற்றிப் துதித்துக் கௌரவிப்பதும், வாழ்வை தார்மீகத்துடன் வாழ்ந்து கௌரவிப்பதும், அத்துடன் என்னையும் நேசித்துக் கௌரவிப்பதுமே வாழ்வின் முக்கிய நோக்கம் என்பதை உணர்ந்து, அதை இப்போ ஏற்றுக்கொள்கிறேன்.

நேர்மை தான் வாழ்வு! முழுமையான இறைசக்தியின் சிறு துகளாகிய உனது ஆன்மாவிற்கு நன்மை செய்வதற்காக, ஆண்டவன் அளிக்கும் அழைப்பும் சந்தர்ப்பமும் தான் உனது வாழ்வு. ஈஸ்வரன் நல்லவன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா? நீ நல்லவனாகச் செயற்படுவதை எதிர்பார்த்திடும் வாழ்வு, அதே நன்மையை உனது நேர்மைக்குப் பரிசாகத் தரும். ஆமாம், நேர்மை! உனக்குள்ளிருந்து வெளிவரும், உனக்கு நன்கு பரிச்சயமான நற்குணம் தான், அந்த நேர்மை! எந்த நிலையிலும், தார்மீகத்துடன் இதயபூர்வமாக செயற்படுபவன் நான் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து, அதை ஆமோதிப்பவன், நீ நேர்மை! முதலில் உனக்கும், பின் பிறருக்கும், உன்னால் இயன்றளவு சிறப்பாகச் செயற்பட எப்போதும் ஊக்கத்துடன் செயற்படுபவன் நீ.

நேர்மை, உண்மையை அறிந்திடுவதில் ஆர்வம். உண்மையைத் தேடுதல், உண்மையைக் கற்றறிந்து கொள்ளுதல், உண்மையைப் பரப்புதல், உனக்காகவும், பிறருக்காகவும், உண்மைக்காகவும் முனைந்து செயற்படுதல். வாழ்வில் உனக்கு அமைந்த சகலவற்றையும் அங்கீகரித்து கடவுளையும் உன்னையும் கௌரவித்திட வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து, மற்றவற்றைக் குறைகூறாது வாழ்தல். நேர்மை, சரி, பிழை எனும் பாகுபாடற்ற நேர்மை.

வாழ்வெனும் பிரபஞ்சத்தில், உனது தகைமைப்பெறுபேறுகளைக் குறித்து வைத்து, சன்மானம் தந்து, உன்னைச் சதாபுதுப்பித்துக் குணமாக்கி ஆசீர்வதிப்பது இந்த நேர்மை. உனது ஒவ்வொரு சிந்தனையும் அதற்குத் தெரியும். உனது ஒவ்வொரு சொல், ஒவ்வொரு செயலும் அதற்கு அத்துபடி! இவற்றினுள் மறைந்திருக்கும் உனது சுயநல உத்தேசமும் அதற்கு நன்கு தெரியும். உனது சிந்தனை, சொல், செயல் மூன்றும் நிஜமின்றி போலியாக இருந்தால் அதற்குத் தகுந்தவாறே பிரபஞ்சம் உனக்குப் பதில் அளிக்கின்றது.

வாழ்வுப் பிரச்சினைகளில் தத்தளித்து நேர்மையிலிருந்து விலகி, நீ இன்றுவரை வாழ்ந்திருக்கலாம். இன்று அது பரவாயில்லை. சற்று நிதானித்து, உன் நேர்மையைக் கண்காணித்து அலசி வரையறுத்துக் கொள். வாழ்வில் நீ இப்போ என்ன செய்கிறாய்? ஏன் அதைச் செய்கிறாய்? எப்படி அதைச் செய்கிறாய்? நீ செய்பவற்றிற்கு என்ன வெகுமதி உனக்குக் கிடைக்கிறது? என்ன வெகுமதி கிடைக்க வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாய்? உனது செய்கைகளினால் உன்னையும், பிரபஞ்சத்தையும் இறைவனையும் நீ கௌரவிக்கின்றாயா? சிந்தித்துப் பார்!

எனது மனதைக் கண்காணித்து வரையறுத்து, நேர்மையாக வாழ்வதே இறைவனையும் என்னையும் கௌரவிக்கும் நல்வழி என்பதை உணர்ந்து இன்று முதல் நானாகவே என் தவறுகளைத் திருத்திக் கொள்ள ஆரம்பிக்கிறேன்.

**ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்** 129

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



லலிதா புரூடி


**Raphael Maharaja**

**Barrister, Solicitor & Notary Public**

**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



**Tel: 416-847-7077 Fax: 416-847-7088**

# பைதகரஸ் - தொடர்ச்சி

## பிரபஞ்சம் - 20

பைதகரஸ் வாழ்ந்த காலத்தில் இனம்காணப்பட்ட வான்பொருட்களாகிய புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி என்ற ஐந்து கோள்களும், சூரியன், சந்திரன் போலவே மேற்குத்திசையாக அசைவதைக் கண்டனர். ஏனையவை விண்பரப்பில் அசையாது காணப்பட்டன. வேறு எந்தவிதமான அவதானிப்புகளும் செய்ய முடியவில்லை. இந்த தரவுகளைக் கொண்டு, பேரண்டத்தை இனம் காண முயற்சித்தார் பைதகரஸ். அதற்காக அவர் சில கருதுகோள்களையும், எடுமானங்களையும் முன்வைக்க வேண்டியிருந்தது.

நிலையான உருண்டை வடிவினதான பூமியை பேரண்டத்தின் மையம் எனக் கருதினார் பைதகரஸ். இன்னொரு விடயத்தினையும் பைதகரஸ் மற்றையவர்கள் போலவே அவதானித்தார். பூமியின் மேலே எறியப்பட்ட கல், மரங்களில் உள்ள பழங்கள் போன்று பூமியின் மேல் விடப்படும் பொருட்கள் எல்லாம் பூமியின் மேலேயே வந்துவிழுவதை அவதானித்தார். அப்படியாயின் ஏன் இந்த விண்மீன்களும், பூமியைச் சுற்றிவரும். ஏழு வான்பொருட்களும், பூமியின் மேல் வந்து விழவில்லை? அவைகூட பூமியின் மேலாகத்தானே இருக்கின்றன.

அதைவிட இன்னொரு விடயத்தினையும் பைதகரஸ் கணித்துக்கொண்டார். பூமியை வலம் வரும் ஏழு வான்பொருட்களும் வெவ்வேறு தூரத்தில் பூமியை வலம்வருவதை அவதானித்தார். இந்த ஏழு வான் பொருட்களுக்கும் அப்பாலேயே நிலையான விண்மீன்கள் இருப்பதையும் பைதகரஸ் கண்டுகொண்டார். சந்திரன், புதன், வெள்ளி, சூரியன் (கதிரவன்), செவ்வாய், வியாழன், சனி என்பவை இதே ஒழுங்கில் பூமியில் இருந்து தான் தூரங்களில் இருப்பதாகவும் விண்மீன்கள் அதற்கும் வெகுதூரத்தில் உள்ளதாக பைதகரஸ் கூறினார். அடுத்ததாக இவையெல்லாம் ஏன் பூமியில் வந்து விழவில்லை என்பதற்கு இன்னொரு விளக்கத்தையும் வைத்தார்.

பூமியின் மேலாக, வெவ்வேறு தூரங்களில் பூமியைச்சுற்றி ஏழு கோளங்கள் உள்ளன எனக்கூறினார். இந்த ஏழு கோளங்களும் பளிங்கினால் ஆனவை. பளிங்கினால் ஆன கோளங்கள் அல்லவா! அதனால் அக்கோளங்கள் பூமியில் இருப்பவர்களுக்கு தெரியாது. இக்கோளங்களின் மேற்பரப்பிலேயே சந்திரன், புதன், வெள்ளி, கதிரவன், செவ்வாய், வியாழன், சனி என்பவை இருக்கின்றன. இந்த ஏழு கோளங்களின் மையமும் பூமியிலேயே உள்ளது. இது மாத்திரமல்ல சந்திரன், புதன், வெள்ளி, கதிரவன், செவ்வாய், வியாழன், சனி என்ற ஏழு கோள்களும் இருக்கும். கண்களுக்குப் புலப்படாத பளிங்கினால் ஆன கோளங்கள் மேற்குப் புறமாக அசைகின்றன. இதனாலேயே இந்த ஏழு கோள்களும் மேற்குப்புறமாக அசைவது போல் பூமியில் உள்ளவர்களுக்கு தெரிகின்றது என்றார் பைதகரஸ். கண்ணுக்குத் தெரியாத தெளிவான பளிங்குகளில் இந்தக் கோள்கள் இருப்பதனாலேயே பூமியின் மேல் வந்து விழவில்லை.

விண்மீன்கள் இந்த ஏழு பளிங்குக்குக் கோளங்களுக்கும் அப்பால் உள்ள இன்னொரு பளிங்குக் கோளில் பதிக்கப்பட்டு உள்ளன. இந்த எட்டாவது பளிங்குக் கோளானது நிலையானது, அசையாதது. அதனால்தான் இந்த விண்மீன்கள் அசையாது நிற்கின்றன என்றார் பைதகரஸ்.

இந்தத் தொகுதியானது பேரண்டம், அதாவது பிரபஞ்சம் என்று பைதகரஸ் கூறினார். பைதகரஸ் கண்ட பேரண்டமானது நிலையானது, பெரியது அல்ல. பூமியின் பருமனைவிட கொஞ்சம் பெரியதானதாகத்தான் எமது பிரபஞ்சம் உள்ளது எனப் பைதகரஸ் நம்பினார், கூறினார்.

அன்றிருந்த அறிவியல் நிலையில் பைதகரஸின் பேரண்டம் பற்றிய எதிர்வு கூறலானது அதிசயிக்கத்தக்கது. இதைவிடச் சிறந்த விளக்கத்தினை மனித இனம் கூறமுடியுமா என்று கேட்கத்தான் வேண்டும். இதுதான் பேரண்டக்கதையின் ஒரு ஒழுங்கான ஆரம்பம். இதன் அடிப்படையிலேயே பேரண்டக்கதையானது தொடரத் தொடங்கியது. காலஓட்டத்தினூடு இந்தப் பேரண்டமானது கடவுளின் ஒழுங்கமைப்பிலே ஆனது. பளிங்குக் கோளங்களின் அசையும் பொறிமுறையானது ஆண்டவனின் கட்டளைப்படியே ஆனது என்றும் கூறினார். அதற்கான சூத்திரம் அல்லது பொறி பூமியில் தான் எங்கோ இருக்க வேண்டும் எனவும் நம்பினார் பைதகரஸ். ஏனெனில் பேரண்டத்தின் மையம் பூமியல்லவா! பைதகரசின் பேரண்டச் சித்தாந்தமானது எவ்வளவு பேரைச் சென்றடைந்தது என்பது தெரியாது. ஆனாலும் கிரேக்கத்தில் வாழ்ந்த வானவியலாளர்களினால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நம்ப வேண்டியிருக்கின்றது. ஏனெனில் இவரது பேரண்டக்கொள்கையானது பின்னர் வாழ்ந்த கிரேக்க வானவியலாளர்களினால் சிற்சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அதில் சிறப்பான இடத்தைப் பெறுபவர் அரிஸ்ரோற்றில்.

பேரண்டக்கதையின் அடுத்த நாயகனாக அரிஸ்ரோற்றலையே நான் காண்கின்றேன். சிறந்த விஞ்ஞானியாக, தத்துவஞானியாக, கணிதவிற்பனராக அக்காலத்தின் அதிஉயர் மனிதரான அரிஸ்ரோற்றில் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். விண்வெளி பற்றிய அவரது எண்ணத்தையும் வானவியலில் அவரது பங்களிப்பினையும் அடுத்த முறையில் இருந்து பார்ப்போம்.

குறிப்பு - கிரேக்கத்தின் தத்துவஞானிகள் பலர் கடவுட்கொள்கையை மறுப்பவர்கள் என்பது பரவலான கருத்து. அந்தவகையில் பைதகரசைக் கூட கடவுட் கொள்கைக்கு மறுப்புடையவராகப் பார்ப்பவர்களும் உண்டு. எப்படியாயினும் பேரண்டத்திற்கான விளக்கத்தை, அமைப்பினை முதன்முதலாக உலகத்திற்கு தந்தவர் பைதகரஸ்தான் என நம்பவேண்டியுள்ளது.



**- கனி -**

# சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா

## நடத்தும் பேச்சு, பொது அறிவுப் போட்டிகள் - 2008

மாணவர்களே!பெற்றார்களே!!

தமிழ்மொழி, பண்பாடு, கல்வி ஆகியதுறைகளில் சேவையாற்றிய அறிஞர்களின் வரலாறுகள் அறியப்பட வேண்டியன. அவ்வகையில் மாணவர்களை நெறிப்படுத்தும் நோக்கோடு, எமது மன்றம் சுவாமிவிபுலாநந்தர் நினைவுவிழாவையும் மாணவர்களுக்கான போட்டிகளையும் வருடாவருடம் நடத்திவருகின்றது.

இவ்வாண்டிற்கான சுவாமிவிபுலாநந்தர் நினைவுப்போட்டிகள் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது. போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களும் பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு ஆகியவற்றுக்குரிய உரைப்பகுதிகளும் பொதுஅறிவுவினாவிடைகளும் தனியார்தமிழ் கல்விநிலை யங்களிலும் கோயில்களிலும் வர்த்தகநிலையங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகள் யாவும் கட்டணமின்றி நடத்தப்படுகிறது. போட்டிகளில் முதலிடம் பெறுவோர் சுவாமிவிபுலாநந்தர் ஆண்டுவிழாவின்போது உரையாற்றுவதோடு வெற்றிக்கேடயமும், பரிசும்வழங்கி பாராட்டப்படுவர்.

போட்டியிற் பங்குபற்றுவோர் பின்வரும் வயதுஎல்லைகளைக் கவனித்து தத்தமக்குரிய பிரிவிற் பதிவுசெய்யும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

- பாலர் பிரிவு…01.01.2000 - 31-12-1996 பிறந்தோர்…
  பேச்சுப்போட்டி (தமிழ்)
- கீழ்ப்பிரிவு……01.01.1997 - 31-12-1992 பிறந்தோர்…
  பேச்சுப்போட்டி (தமிழ்) பொது அறிவுப்போட்டி (தமிழ், ஆங்கிலம்)
- நடுப்பிரிவு……01.01.1993 – 31-12 1989 பிறந்தோர்…
  பேச்சுப்போட்டி (தமிழ்) பொது அறிவுப்போட்டி (தமிழ், ஆங்கிலம்)
- மேற்பிரிவு……01.01.1990 - 31.12.1993……
  பேச்சுப்போட்டி (தமிழ், ஆங்கிலம்) பொது அறிவுப்போட்டி (தமிழ், ஆங்கிலம்)

சுவாமி பற்றிய தகவல்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக மேற்பிரிவி னர்களுக்கான பேச்சுப்போட்டியும், கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு ஆகியவற்றிக்கான பொது அறிவுப் போட்டியும் தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறும். போட்டி நடைபொறும் முகவரி திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படும். மனனம் செய்வதற்குரிய உரைகளையும், தகவல்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெறவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2008 யூலை 31 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகவும் அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Swami Vipulananda Arts Society – Canada
R.P.O Woodside square,
P.O. Box 63608,
Scarborough, ON, M1V 5K2

போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களையும், உரைப் பகுதிகளையும் பெற்றுக்கொள்ள தொடர்புகளுக்கு அழையுங்கள்:

| | | |
|---|---|---|
| 416 289 9571 | 416 261 2239 | 416 630 6449 |
| 905 794 5098 | 905 201 3018 | 905 277 9440 |
| 416 998 2284 | 416 431 4843 | 416 332 9363 |
| 905 712 0212 | | |


**For all your Commercial, Official & Residential Moving or Deliveries Please call**
**Kumar Moving - Tel.: 647-204-4110**




**உங்கள் வியாபார, காரியாலய வீட்டு ஏற்றுமதி இறக்குமதி மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் அழையுங்கள்**
குமார் மூவிங் 647.204.4110

# கோப்பை வென்றது இலங்கை - கோட்டை விட்டது இந்தியா

## விளையாட்டுத் தகவல்கள் 241

இந்தியா அணியை மீண்டும் ஒருமுறை பைனல் 'அலர்ஜி' துரத்தியது. ஆசிய கோப்பை பைனலில் சொதப்பலாக ஆடிய இந்திய பேட்ஸ்மேன்கள் அஜந்தா மெண்டிஸ் சுழலில் பரிதாபமாக சரணடைந்தனர். 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்ற இலங்கை அணி ஆசிய கோப்பையை நான்காவது முறையாக கைப்பற்றியது.

பாகிஸ்தானில் ஆசிய கோப்பை கிரக்கெட் தொடர் நடந்தது. கராச்சியில் நடந்த பைனலில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. இந்திய அணியில் பிரவீண் குமாருக்கு பதிலாக ராபின் உத்தப்பா இடம் பெற்றார். இலங்கையின் முன்னணி பவுலர்கள் வாஸ், மெண்டிஸ் மீண்டும் அணிக்கு திரும்பினர். டொஸ் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி மிகுந்த துணிச்சலுடன் பீல்டிங் தேர்வு செய்தார். இலங்கை அணிக்கு எடுத்த எடுப்பிலேயே 'ஷாக்' 2வது ஓவரில் இஷாந்த் பந்தை அடித்த ஜெயசூர்யா ஒரு ஓட்டத்துக்காக ஓடி வர முற்பட்டார். பின்னர் 'நோ' சொன்னார். அதற்குள் சங்கக்கரா பாதி ஓடி வர, சுரேஷ் ரெய்னா நேரடி 'த்ரோ' செய்தார். பெயில்ஸ்' பறக்க, சங்ககரா (4) பரிதாபமாக ஓட்ட அவுட்டானார். இதற்கு பின் இஷாந்த் சர்மா விக்கெட் வேட்டை நடத்தினார். இவரது வேகத்தில் அணித்தலைவர் ஜெயவர்த்தனா (11), கபுகேதரா (5), சமரசில்வா (0) அவுட்டாயினர். இதையடுத்து 12 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்கள் எடுத்து இலங்கை திணறியது.

**மீண்டது இலங்கை** - இந்தச் சூழலில் ஜெயசூரியா, தில்ஷன் பொறுப்பாக ஆடி அணியை மீட்டனர். வழக்கம் போல் அதிரடி காட்டிய ஜெயசூரியா, ஆர்.பி.சிங் வீசிய 16வது ஓவரில் 3 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 26 ஓட்டங்கள் விளாசினார். ஒருநாள் அரங்கில் 27வது சதம் கடந்த இவர் 125 ஓட்டங்களுக்கு (9 பவுண்டரி, 5 சிக்சர்) சேவக் சுழலில் வீழ்ந்தார். மறுபக்கம் 14வது அரைசதம் கடந்த தில்ஷன் 56 ஓட்டங்களுக்கு அவுட்டானார். இதையடுத்து இலங்கையின் ஓட்ட வேகம் குறைந்தது. வாஸ் 19, குலசேகரா 29 ஓட்டங்கள் எடுத்தனர். டெயிலெண்டர்கள் ஆர்.பி.சிங் வேகத்தில் விரைவாக நடையை கட்ட, இலங்கை அணி 49.5 ஓவரில் 273 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது.

**மெண்டிஸ் மிரட்டல்** - எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு சேவக் அதிரடி துவக்கம் தந்தார். மறுபக்கம் காம்பிர் (6) ஏமாற்றினார். 26 பந்தில் அரைசதம் கடந்த சேவக் 60 ஓட்டங்களுக்கு (12 பவுண்டரி) மெண்டிஸ் பந்தில் வீழ்ந்தார். இதே ஓவரில் யுவராஜும் (0) வெளியேற சிக்கல் ஏற்பட்டது. தொடர்ந்து மிரட்டிய மெண்டிஸ் சுழலில் சுரேஷ் ரெய்னா (16), ரோகித் சர்மா (3) வெளியேறினர். முரளிதரன் பந்துவீச்சில் உத்தப்பா (20) நடையை கட்டினார். இப்படி 'டொப் ஆர்டர்' பேட்ஸ்மேன்கள் பொறுபற்ற முறையில் ஆட, இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

**நழுவிய 'ஹாட்ரிக்'** - மீண்டும் பந்துவீச வந்த மெண்டிஸ் 32வது ஓவரில் இர்பான் பதான் (2), ஆர்.பி.சிங்கை (0) அடுத்தடுத்த பந்தில் அவுட்டாக்கினார். இதையடுத்து 'ஹாட்ரிக்' வாய்ப்பு காத்திருந்தது. இந்த நேரத்தில் ஓஜா தடுத்து ஆட, வாய்ப்பு நழுவியது. தனி நபராக போராடிய அணித்தலைவர் தோனி (49), வாஸ் வேகத்தில் வெளியேற, கோப்பை கனவு தகர்ந்தது. இந்திய அணி 39.3 ஓவரில் 173 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டாகி தோல்வி அடைந்தது. வந்தார் முஷாரப். பரிசளிப்பு நிகழ்ச்சியில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பங்கேற்றார். இந்திய அணியை தகர்த்த மெண்டிஸ் 6 விக்கெட் வீழ்த்தினார். இவரே ஆட்டநாயகன், தொடர்நாயகன் விருதுகளை தட்டிச் சென்றார்.

**மெண்டிஸ் கலக்கல்** - சுழல்ஜாலம் நிகழ்த்திய 23 வயதான மெண்டிஸ் ஆசிய கோப்பை தொடரில் 6 விக்கெட் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். ஆப்-பிரேக், லெக்-பிரேக், கூக்ளி என அனைத்து வகையான பந்து வீச்சையும் கலந்து வீசுவதில் இவர் வல்லவர். இதன்மூலம் பேட்ஸ்மேன்களை எளிதில் குழப்பி விடுகிறார். நேற்று 13 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை கைப்பற்றி, ஆசிய கோப்பை யின் சிறந்த பந்துவீச்சையும் பதிவு செய்தார்.

**விடாது துரத்தும்** - இந்திய அணிக்கு பைனல் என்றாலே நடுக்கம் வந்துவிடுகிறது. கடைசியாக பங்கேற்ற மூன்று அல்லது அதற்குமேற்பட்ட அணிகள் கலந்து கொண்ட தொடர்களில் 22முறை பைனலுக்கு முன்னேறியுள்ளது. இதில் 18இல் தோல்வி அடைந்துள்ளது. 2போட்டியில் கோப்பையை பகிர்ந்து கொண்டது. நோத்வெஸ்ற் (2002), அவுஸ்திரேலிய முத்தரப்பு (2008) ஆகிய இரண்டு தொடர்களில் மட்டுமே கோப்பை வென்றுள்ளது.

**இலங்கை சமன்** - ஆசிய கோப்பை தொடரில் இந்திய அணியின் ஆதிக்கத்தை நேற்று இலங்கை தகர்த்தது. நான்காவது முறையாக கோப்பை வென்ற இலங்கை , அதிக கோப்பை வென்ற அணிகள் வரிசையில் இந்தியாவுடன் (4) முதலிடத்தை பகிர்ந்து கொண்டது. பாகிஸ்தான் ஒருமுறை கோப்பை வென்றுள்ளது.

**வில்லன் ஆர்.பி.சிங்** - நேற்று இர்பான் பதான் வீசிய 15வது ஓவரில் ஜெயசூரியா பந்தை தூக்கி அடித்தார். இதை சுலபமாக 'கேட்ச்' பிடித்திருக்கலாம். ஆனால் தவறாக கணித்த ஆர்.பி.சிங் அப்படியே படுத்து நழுவ விட்டார். அப்போது ஜெயசூரியா 56 ஓட்டங்கள் தான் எடுத்து இருந்தார். பின்னர் ஆர்.பி.சிங் வீசிய 16வது ஓவரில் ஜெயசூரியா 26 ஓட்டங்களை அடித்து அசத்தினர்.

இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆறு அணிகள் பங்கேற்ற ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடந்து. 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளில் முதலிரண்டு இடங்களை அணிகள் 'சூப்பர் - 4' சுற்றுக்கு தகுதி பெற்றன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியா, இலங்கை அணிகள் பைனலில் மோதின. மெண்டிஸ் மந்திர பந்துவீச்சில் இந்திய பேட்ஸ் மேன்கள் வரிசையாக வெளியேற, இலங்கை 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 4வது முறையாக ஆசிய சாம்பியனானது.

**அதிரடி பேட்டிங்** - 'சூப்பர் - 4' போட்டியில் ஹொங்காங் அணிக்கு எதிரான போட்டியில் சூப்பராக பேட்செய்த இந்திய அணி 374 ஓட்டங்கள் எடுத்து ஆசிய கோப்பையில் அதிக ஓட்டம் எடுத்த அணி என்ற சாதனை படைத்தது.

**ரெய்னா அபாரம்** - மூன்றாவது வீரராக வந்த ரெய்னா, அணியில் தனது இடத்தை உறுதி செய்து கொண்டார். இத்தொடரில் இரண்டு சதங்கள் கடந்தார். இவர் 6 போட்டிகளில் 372 ஓட்டங்கள் எடுத்து, அதிக ஓட்டம் எடுத்த இந்திய வீரராக திகழ்கிறார். அணித்தலைவர் தோனி சூழ்நிலை அறிந்து சிறப்பாக விளையாடி வருகிறார். ரோகித், யுவராஜ் சொல்லிக் கொள்ளும் படி விளையாடவில்லை.

**பவுலிங் பரிதாபம்** - பவுலிங் சுத்தமாக எடுபடவில்லை. பீல்டிங் மட்டமாக இருந்தது. அணிக்கு பின்னடைவை தந்தது. இஷாந்த், ஆர்.பி.சிங் ஒன்று இரண்டு போட்டிகளில் மட்டுமே ஜொலித்தனர். இர்பான் பதான் ஓட்டங்களை வாரி வழங்கினார். சாவ்லா, ஓஜா முழுதிறமையையும் வெளிப்படுத்தவில்லை.

**சிக்சர் மன்னன்** - இலங்கையின் ஜெயசூரியா, வழக்கம் போல் எதிரணி பவுலர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார். இத்தொடரின் 'நம்பர் -1' பேட்மேனாக வலம் வரும் இவர் ஆசிய கோப்பை தொடரில் 1,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையையும் தன்வசப் படுத்தி கொண்டார். சங்ககரா, கபுகேதரா இவருக்கு நல்ல ஒத்துழைப்பு தந்தனர்.

மெண்டிஸ் மிரட்டல் - இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர்கள் கலக்கினர். பைனலில் மெண்டிஸ், இந்திய பேட்ஸ்மேன்களை திணற செய்து விட்டார். 5 போட்டிகளில் 17விக்கெட் கைப்பற்றி, தொடர் நாயகன் விருதை வென்றார். முரளிதரன் 11விக்கெட் வீழ்த்தி தொடரின் 2வது சிறந்த பவுலர் என்ற பெருமை பெற்றார்.

**பாகிஸ்தான் பரிதாபம்** - சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணி பைனலுக்கு முன்னேற முடியாமல் தவித்தது. சோயப் மாலிக் யூனிஸ் சிறப்பாக விளையாடினர். அக்தர், ஆசிப், குல் இல்லாதது பின்னடைவாக அமைந்தது.

**தோனி '2'** - ஆசிய கோப்பை தொடர் முடிவுற்ற நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒருநாள் போட்டிகளுக்கான ரேங்கிங் பட்டியலை நேற்று வெளியிட்டது. 5 போட்டிகளில் 327 ஓட்டங்கள் குவித்த இந்திய அணித்தலைவர் தோனி, 4வது இடத்தில் இருந்து முன்னேறி 2வது இடத்தை கைப்பற்றினார். சச்சின் 2வது இடத்தில் இருந்து 6வது இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

**ஜெயசூரியா முதலிடம்**

ஆசிய கோப்பை தொடரில் வழக்கமான அதிரடியை தொடர்ந்த இலங்கை வீரர் ஜெயசூரியா, அணிக்கு மீண்டும் ஒருமுறை கோப்பை வென்று தந்தார். இத்தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரராகவும் இவர் திகழ்கிறார். இத்தொடரின் 'ரொப் -10' பேட்ஸ்மேன்கள்

| வீரர் | போட்டி | ஓட்டங்கள் | 100/50 | |
|---|---|---|---|---|
| ஜெயசூரியா | இலங்கை | 5 | 378 | 2/1 |
| ரெய்னா | இந்தியா | 6 | 372 | 2/2 |
| சேவக் | இந்தியா | 5 | 348 | 1/2 |
| சங்ககரா | இலங்கை | 6 | 345 | 3/0 |
| தோனி | இந்தியா | 6 | 327 | 1/2 |
| யூனிஸ் | பாக். | 5 | 296 | 1/2 |
| காம்பிர் | இந்தியா | 6 | 259 | 0/3 |
| சோயப்மாலிக் | (பாக்.) | 4 | 212 | 1/1 |
| கபுகேதரா | இலங்கை | 6 | 209 | 0/2 |
| ஹசன் | வங்கதேசம் | 5 | 195 | 0/2 |

**மெண்டிஸ் சுழல் ஜாலம்**

ஆசிய கோப்பை தொடரின் பைனலில் 6 விக்கெட் வீழ்த்தி அசத்திய இலங்கை சுழற்பந்து வீச்சாளர் மெண்டிஸ் இத்தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரராகவும் வலம் வருகிறார். இவர் இங்கு 5 போட்டிகளில் 17 விக்கெட் கைப்பற்றியுள்ளார். இத்தொடரில் 'ரொப் -10' பந்துவீச்சாளர்கள்.

| வீரர் | போட்டி | விக்கெட் |
|---|---|---|
| மெண்டிஸ் (இலங்கை) | 5 | 17 |
| முரளிதரன் (இலங்கை) | 5 | 11 |
| தன்வீர் (பாகிஸ்தான்) | 5 | 10 |
| இப்திகார் (பாகிஸ்தான்) | 5 | 9 |
| ஆர்.பி.சிங் (இந்தியா) | 5 | 7 |
| அப்தூர் ரசாக் (வங்கதேசம்) | 5 | 7 |
| ஜாகித் (எமிரேட்ஸ்) | 2 | 6 |
| சாவ்லா (இந்தியா) | 3 | 6 |
| ஹுசைன் (வங்கதேசம்) | 5 | 6 |
| இஷாந்த் (இந்தியா) | 5 | 6 |

கிரிக்கெட் அரங்கில் தொடர்ந்து சிறப்பான வெற்றிகளை குவித்து வந்த இந்திய அணிக்கு சமீப காலமாக பைனல் தோல்வி எனும் 'தோஷம்' மீண்டும் தொற்றிக் கொண்டதோ என்ற சந்தேகம் எழுகிறது.

ஒருநாள் கிரிக்கெட் தொடர்களை பொறுத்தவரை, பைனல் இந்தியாவுக்கு தலைவலியாகவே உள்ளது. அசார், கங்குலி, சச்சின் டிராவிட் ஆகியோர் அணித்தலைவராக இருந்தபோது பல்வேறு தொடர்களின் இறுதிப் போட்டியில், இந்திய அணி தோல்வியை தழுவியது. குறிப்பாக கடந்த 2003 ஆண்டு கங்குலி தலைமையிலான இந்திய அணி, உலககோப்பை பைனல் வரை சென்று ஏமாற்றமடைந்தது. கங்குலி அணித்தலைவனாக இருந்த போது, இந்த 'பைனல்' பிரச்சினையால் ரசிகர்கள் அதிகம் ஏமாற்றமடைந்தனர். வங்கதேசத்தில் நடந்த கிட்பிளை கோப்பை மற்றும் ஆசிய கோப்பை இரண்டிலும் தற்போது இந்திய அணி பைனல் வரை சென்று தோல்வி அடைந்துள்ளதால் தற்போது ரசிகர்களுக்கு மீண்டும் கவலை ஏற்பட்டு உள்ளது.

தோனி தலைமையேற்ற பிறகு இந்திய அணி 'ருவென்ரி - 20' உலக கோப்பை, அவுஸ்திரேலிய முத்தரப்பு தொடர்களில் கோப்பை வென்றது. சச்சின், கங்குலி, டிராவிட் போன்ற முன்னணி பேட்ஸ்மேன்கள் இல்லாமலேயே, தோனி தலைமையிலான இளம் இந்திய அணி இவ்வெற்றிகளை குவித்தது. தோனி திறமையாக அணியை வழிநடத்தி சென்றதால் பைனல் பிரச்சினையை ரசிகர்கள் மறந்திருந்தனர். இரண்டு தொடர்களின் தோல்வி, மீண்டும் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தை ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டு உள்ளது. இனி வரும் தொடர்களில் பைனல் தோல்விக்கு முடிவு கட்ட வேண்டிய பொறுப்பு தோனிக்கு உள்ளது.

## உதைபந்தாட்டம்

**ஸ்பெயினில் உற்சாகம் - சோகத்தில் ஜேர்மனி**

யூரோ கோப்பையை கைப்பற்றியதை தொடர்ந்து ஸ்பெயின் முழுவதும் வெற்றி கொண்டாட்டங்கள் அரங்கேறின. அதிர்ச்சி தோல்வியால் ஜேர்மனி ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். ஐரோப்பிய



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# FINTRAC புதிய சட்டம் - June 23, 2008

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதலிற்கு பின்னர் உலகின் பல நாடுகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. செப்ரெம்பர் 11, 2001 இல் இந்நிகழ்வு ஏற்பட்டது. இது 911 தாக்குதல் என பொதுவாக அழைக்கப்படுகின்றது.

இந்த 911 தாக்குதலிற்கு பின்னர் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் அதனைத் தொடர்ந்து பல எதிர்பாராத, விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. கனடாவிலிருந்து பல சட்டத்திற்கு முரண்பாடான குழுமங்களிற்கு பணம் அனுப்பப்படுவதாகவும், மேலும் உலகின் பல நாடுகளிலிருந்து கனடாவிற்குள் இலகுவாக பணம் கொண்டுவரப்படுவதாகவும் பல அரசாங்க உயர்மட்டங்களிலிருந்தும் குற்றங்கள் கனடாமீது சாட்டப்படுகின்றன. மேலும் உலகிலேயே சட்டத்திற்கு முரண்பாடான இலக்குகளிற்கு, செயல்களிற்கு கனடா இலகுவானதாக கொள்ளப்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்காக பல புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

இதன் புதியவரவாக 'Fintrac'- the new legislation கொண்டுவரப்பட்டுள்ளது.
FINTRAC - Financial Transactions and reports Analysis Centre of Canada

பணக்கடத்தல், கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுதல் மற்றும் சட்டத்திற்கு முரண்பாடாக, நடத்தப்படும் செயல்கள் சம்பந்தமான பொருளாதார இரகசிய உளவாளியாக தொழிற்படவும், காவல் துறைக்கும், Intelligence Agencies இற்கும் உதவுமுகமாக யூலை 2000ஆம் ஆண்டில் இச்சட்டம் உருவாக்கப்பட்டது. இதனை Canada's Financial Intelligence (FIU) என்றும் அழைக்கப்படுகின்றது.

இதன் தலைமையகம் ஒட்டாவாவில் இருக்கின்ற போதும், பிராந்திய அலுவலகங்கள் ரொறொன்ரோ, மொன்றியல் மற்றும் வன்கூவரிலும் அமைக்கப்பட்டுள்ளது. வீடு, வியாபாரம், நிலம் போன்ற வியாபாரங்களில் ஏற்படும் குளறுபடிகளையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுப்பதற்காக யூன் 23, 2008 இலிருந்து ஆஸ்தி வியாபாரத்தில் இறுக்கமான கட்டுபாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனாலேயே FIN-TRAC Legislation என அழைக்கப்படுகின்ற இச்சட்டம் பணம் தொடர்பான பல வியாபாரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

இந்தக்கட்டுரை ஆஸ்தி சம்பந்தமான FINTRAC அமலாக்கமே ஆராயப்படுகின்றது. யூன் 23, 2008 இலிருந்து, கொண்டுவரப்பட்ட சட்டப்படி, ஒருவர் ஆஸ்தியை விற்க அல்லது வாங்கும்போது, வாங்குபவர் அல்லது விற்பவர்களுடைய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

உதாரணமாக, ஆஸ்தி ஒன்றை விற்பவருடைய அத்தாட்சிகள்/ தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது. இதேமாதிரி ஆஸ்தியை வாங்குபவருடைய அத்தாட்சியும் பெறப்படுகின்றது. வாங்குபவரினால் கொடுக்கப்படும் ஆரம்பமுதலீடு (Downpayment) கொடுக்கப்படும் முறை, மற்றும் தரப்படும் காசோலையின் தகவல்களும் குறிப்பிட்ட வியாபார முகவரினால் (Real Estate Salesperson / Broker) பெறப்படுகின்றது.

பெறப்பட்ட தகவல்கள் Real Estate Brokerage இல் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட வேண்டும். அத்தாட்சியை உறுதிப்படுத்த பெறப்படும் அத்தாட்சிப்பத்திரங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படுவதாகவும், தகுதியானதாகவும் (Valid) இருக்க வேண்டும்.

இவற்றில் சில
1. Driving License (வாகன சாரதி அனுமதிப்பத்திரம்)
2. Passport (கடவுச் சீட்டு)
3. Birth Certificate (பிறப்பு அத்தாட்சி பத்திரம்)
4. Social Insurance Number

(OHIP Card - அத்தாட்சி பத்திரமாக பாவிக்க முடியாது.)

Deposit ஆக அல்லது வேறுகாரணத்திற்காக மேலும் பணமாக, காசோலையாக Draft மற்றும் மணி ஓடராகப் பெறும் போது கொடுப்பவரின்
1. பெயர், விலாசம், பிறந்த திகதி
2. தொழில் / வருமானம்
3. தரப்படும் காலம் (நேரம், திகதி)
4. Account இன் தகவல்கள்
5. பெறப்படும் தொகை
6. பெறப்படும் காரணம் (Reason)

போன்றவை பெறப்படவேண்டும்.

கொடுப்பது காசாக இருந்தால் மற்றும் பெறுமதி $10,000 இற்கு மேலாக இருந்தால் மேற்பட்ட தகவல்கள் FINTRAC இற்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.

மேலும் குறிப்பிட்ட ஆஸ்தி வியாபாரம் சந்தேகப்படுமளவிற்கு இருக்குமாயின் உடனடித் தகவல் FINTRAC இற்கு தெரியப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் முகவரும், முகவரது நிலையமும் (Brokerage Company) தண்டனைக்கு உட்படுத்தப்படும்.

எந்த விதமான தண்டம் வழங்கப்படும் என்பது December 30, 2008 இல் அறிவிக்கப்படும் என தெரியவருகின்றது.

**குறிப்பு**

வேறு ஒருவரின் பெயரில் ஆஸ்தி ஒன்று வாங்குவதாக இருந்தால், மூன்றாம் நபரின் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றபோதும், ஆஸ்தி முகவரே தகவல்களை சரியானதாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாங்குபவர் அல்லது விற்பவர் வேறு நாட்டில் இருந்தால், அந்த நாட்டில் இருக்கும் ஒருவரின் தகவல்களைப் பெறுவதுடன், அவரினால் வாங்குபவர் அல்லது விற்பவரின் தகவல்கள் சரியாக பெறப்படல் வேண்டும். Power of Attorney மூலம் வாங்குவது விற்பதாக இருந்தால் இருவரினுடைய தகவல்களும் பெறப்படல் வேண்டும்.

**குறிப்பு**

எனவே ஆஸ்தி விற்பவர் அல்லது வாங்குபவருடைய முக்கிய தகவல்களை வீட்டு முகவரிடம் கொடுக்கவேண்டியதால் எதிர்வரும் காலங்களில் உங்கள் வீடு விற்பனை முகவரை (Real Estate Agent) தெரிவு செய்யும்போது மிகவும் நிதானமாக தெரிவு செய்வதன் மூலம் எதிர்காலங்களில் வரும் சிக்கல்களையும், குளறுபடிகளையும் தவிர்க்கலாம்.

இவைபற்றிய மேலதிக தகவல்கள் பெறவிரும்புபவர்கள் ராஜா மகேந்திரன் - 416.315.9397 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் -278**




Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated

**Business Space for Sale / Lease**

***Suitable for Optician / Optometrist / Air Travels / Restaurant ( Dine - In / Take Out) Dentist, Chiropractor & much more... Rent starts $1100. Sale Price starts $144,900 Location: GTA Square (Finch / Middlefield***

**Brand New Condo. for sale**
- *Kennedy & Denison*
- *2 bedroom*
- *about 1000 sqft*
- *Price $289,900*

**Condo. for sale**
- Neilson & Mclevin
- 2 bedroom
- corner unit
- One of largest
- 2 parking
- Asking $169,900

**Condo. for sale**
- Pharmacy & Finch
- 2 bedrooms
- Corner Unit
- Renovated
- $134, 900

**Townhouse for sale**
- Neilson & Sheppard
- 5 bedrooms
- Walk out
- $164, 900

Nantha Aiyadurai
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# மெரினா உப்புக்காற்று

சிந்தனையும்
நித்திரையில்
உறங்கி விழிப்பதுண்டு
அதுபோல்
தூங்கித் தூங்கி விழிக்கின்றது
அந்த
அழகிய கலங்கரை விளக்கம்

பன்னிரு மைல் நீளமான
பொன்னாடை விரிப்பின்மீது
அகன்ற மணல்பரப்பு
அதன்மேல்
முத்தமிடும்
வங்கக் கடலும்
உப்புக் காற்றும்

பட்டம் விடுவோர்க்கு
அங்கே
பசியற்ற வயிறுகள்

மென்பூமியின்
மெத்தை விரிப்பில்
படுக்கையறைக் காட்சிகள்

உலகமயப் பண்பாட்டின்
சில கூறுகளும்
மகிழ்வுடன்
உலாவித் திரிகின்றன

நடை பாதையின்
இரு மருங்கும்
நீண்டு நெருங்கிப் பயணித்து
கடற்கரையில்
கால் கழுவும்
சில்லறை வணிகங்கள்

யானைத் தந்தங்கள்
குடை பிடிக்கும்
மார்பளவுச் சிலையில்
அறிஞர் அண்ணாவின்
ஞானக் கண்கள்

எம்ஜியாரின்
கலையழகை
முந்தி நிற்கின்றது
அவரின்
கொடையழகு

எழுத்து முனையை
ஆழத்தில் திருப்பிய
முதலாவது
புரட்சியாளன்
இளங்கோ
மழித்த தலையுடன்
சமண உடையில்
அவரின்
இடதுகையில் ஏடு
வலதுகையில் எழுத்தாணி

அவரால்
கைவிடப்பட்ட
அரசமுடியும்
உடை வாளும்
அவரின் பாதங்களில்
படுத்திருந்து
நிலையற்ற தன்மையைக்
கற்றுக்
கொடுக்கின்றன

வளர்ந்த நெடுந்தாடியும்
இடது பக்கத் தலையில்
முடிந்த கொண்டையும்
அரசப்புலவரின் அலங்கார ஆடையும்
இரு கையில்
ஏந்திய ஏட்டுக்கட்டுடன்
புன்னகைக்கின்றார்
கவியரசுக் கம்பன்

கண்ணகி காந்தி
சந்திரபோஸ் பாரதி
தமிழ்மறை வள்ளுவன்
முதலியோர்
சீமெந்து மேடைகளில்
அங்கங்கே
தெருவோரக்
காட்சிகளாய்!



முத்துராஜா


IAFS

## சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

## ஒக்ரோபர் 18, 2008

சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பரிசுகள்
முதற் பரிசு 500 கனடிய டொலர்கள்.
இரண்டாம் பரிசு 300 கனடிய டொலர்கள்
மூன்றாம் பரிசு 200 கனடிய டொலர்கள்

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ஆம் நாள் (SEPTEMBER 25, 2008)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director
IAFS
1345 Morningside Ave. Unit #8, Toronto, ON M1B 5K3

- மேலதிக தொடர்புகளுக்கு: 416-450-6833 / 416-804-3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com


# கோப்பை வென்றது இலங்கை

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அணிகள் மோதும் யூரோ கோப்பை கால்பந்து தொடர் சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியாவில் நடந்தது. வியன்னாவில் நடந்த பைனலில் மூன்று முறை சாம்பியன் ஜேர்மனி, ஸ்பெயின் அணிகள் மோதின. ஆட்டத்தின் 33வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டோரஸ் அசுர வேகத்தில் பந்தோடு வந்தார். ஜேர்மனி தற்காப்பு வீரர் பிலிப் லாமை மடக்கிய இவர், கோல் கீப்பர் ஜென்ஸ் மேலனையும் தாண்டி அருமையாக கோல் அடித்தார். இதையடுத்து ஸ்பெயின் 1 - 0 என்ற முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் முரட்டு ஆட்டம் ஆடினர். ஜேர்மனியின் போராட்டம் எடுபடவில்லை.

**44 ஆண்டுகளுக்கு பிறகு** - இறுதியில் ஸ்பெயின் 1 - 0 என்ற கோல் கணக்கில் வென்று கோப்பையை கைப்பற்றியது. முன்னதாக ஸ்பெயின் அணி 1964 இல் அப்போதைய சோவியத் அணியை வீழ்த்தி யூரோ கோப்பை வென்றது. தற்போது 44 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் சாதித்துள்ளது. மூன்று முறை யூரோ சாம்பியனான ஜேர்மனி, இம்முறை வெறுங்கையோடு திரும்ப நேர்ந்தது.

**உலககோப்பை** - ஐரோப்பாவின் கால்பந்து வல்லரசாக முடிசூடியுள்ளதை தொடர்ந்து ஸ்பெயினில் இரவெல்லாம் வெற்றி கொண்டாட்டங்கள் அரங்கேறின. தலைநகர் மாட்ரிட், பார்சிலோனோ, செவில் உள்ளிட்ட இடங்களில் தாய்நாடு கொடியுடன் ரசிகர்கள் உற்சாக வெள்ளத்தில் மிதந்தனர். ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரோட்ரிக்ஸ் கூறுகையில், எனது ஆட்சிக் காலத்தில் யூரோ கோப்பை வென்றது மகிழ்ச்சியான விடயம். இது ஆரம்பம் தான். இன்னும் சிறப்பாக செயல்பட்டு ஸ்பெயின் அணி உலக கோப்பை கைப்பற்றும் என்றார்.

**டோரஸ் இலட்சியம்** - வெற்றி கோல் அடித்த டோரஸ் கூறுகையில், 'பைனலில் கோல் அடித்த தருணம் எனது வாழ்வில் மறக்க முடியாதது. ஐரோப்பாவின் மிகச் சிறந்த வீரராக திகழ வேண்டும் என்பதே இலட்சியம்' என்றார்.

**ஜேர்மனி ஏமாற்றம்** - ஜேர்மனி மீண்டும் வெற்றி பெறும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அணித்தலைவர் மைக்கேல் பாலக் காயம் அடைந்தது சிக்கலாக அமைந்தது. இவர் தொடர்ந்து ராசியில்லாத அணித்தலைவராக இருக்கிறார். இத்தோல்வியால் தலைநகர் பெர்லின் உள்ளிட்ட இடங்களில் ரசிகர்கள் சோகத்துடன் காட்சி அளித்தனர்.

**முதல் தங்கம் - பிரேசில் சபதம்**

ச பவுலோ - ஒலிம்பிக்கில் முதல்தங்கம் வெல்ல பிரேசில் கால்பந்து அணி சிறப்பாக ஆடும் என பயிற்சியாளர் துங்கா தெரிவித்துள்ளார். உலக அரங்கில் கால்பந்து விளையாட்டில் அசைக்கமுடியாத அணியாக வலம்வருவது பிரேசில். உலக கோப்பையை ஐந்துமுறை வென்றுள்ளது. "பிபா ரேங்கிங்கில் நான்காம் இடத்திலிருக்கும் பிரேசில் ஒலிம்பிக்கில் இதுவரை தங்கம் வெல்லவில்லை. லாஸ் ஏஞ்சல்ஸ் (1984) மற்றும் சியோல் (1988) ஒலிம்பிக் போட்டிகளில் இருமுறை வெள்ளி பதக்கமும், அட்லாண்டாவில் (1996) வெண்கலமும் வென்றுள்ளது. அடுத்த மாதம் துவங்கவுள்ள பீஜிங் ஒலிம்பிக்கில் பிரேசில் பங்கேற்கிறது. பயிற்சியாளர் துங்கா கூறுகையில், 'அனுபவம் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும். அணியில் உள்ள இளம்வீரர்களும் சர்வதேச அனுபவம் கொண்டுள்ளனர்' என்றார்.



**FIFA கால்பந்து ரேங்கிங் ஸ்பெயின் அணி முதலிடம்**

FIFA கால்பந்து ரேங்கிங்கில் யூரோ சாம்பியன் ஸ்பெயின் முதன்முறையாக முதலிடம் பிடித்துள்ளது. முதலிடத்தில் இருந்த ஆர்ஜென்ரீனா 6வது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது. சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) நேற்று புதிய ரேங்கிங் பட்டியலை வெளியிட்டது. இதில் யூரோ கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்று அசத்திய ஸ்பெயின் அணி (1557 புள்ளிகள்) முதன்முறையாக முதலிடத்தை கைப்பற்றியது. இத்தொடரின் காலிறுதிக்கு முன்னேறிய இத்தாலி இரண்டாவது இடத்தையும், பைனல் வரை வந்த ஜேர்மனி மூன்றாவது இடத்தையும் பிடித்தன. அரையிறுதிக்கு முன்னேறிய ரஷ்யா 13இடங்கள் முன்னேற்றம் கண்டு, 11வது இடத்துக்கு வந்துள்ளது. நான்காவது இடத்தை பிரேசில் கைப்பற்றியது.

2010 உலக கோப்பை தொடருக்கான தகுதி சுற்றுப் போட்டிகளில் பிரேசிலிடம் தோல்வியடைந்த ஆர்ஜென்ரீனா முதலிடத்தை இழந்து 5 இடங்கள் பின்தங்கியது. இந்திய அணி தனது 153வது இடத்தை தக்கவைத்து கொண்டுள்ளது. தெற்காசிய கால்பந்து தொடரில் பைனல் வரை முன்னேறிய போதும் ரேங்கில் பெரிதாக சாதிக்க முடியவில்லை. கோப்பை வென்ற மாலைதீவு முன்று இடங்கள் வரை முன்னேறி 156வது இடத்தை பிடித்துள்ளது. இலங்கை 161, பாகிஸ்தான் 169, வங்கதேசம் 182 வது இடத்தில் இருக்கின்றன.

# நாடகமேதை சேக்ஸ்பியர்



## வாழ்க்கைப் பின்னணி

எமது பெரும்பாலான புலவர்களைப் போலவே சேக்ஸ்பியரது வாழ்க்கை வரலாறும் தெளிவற்றுக் காணப்படுகின்றது. அவர் வாழ்ந்த எலிசபெத்திய காலத்தில் மன்னர் அல்லாதவரின் வரலாறுகளைப் பதிவு செய்வதில் எவரும் ஆர்வம் காட்டவில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தவரும் அக்காலத்திற் குறைவாகவே இருந்தார்கள்.

எனினும் சேக்ஸ்பியரைப் பற்றி ஆய்வாளர்கள் ஆக்கிய வரலாறு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அவர் பிறந்த நாள் 23.04.1564 என்றும் இறந்த நாள் 23.04.1616 என்றும் வழங்கப்படுகின்றது. பெரியவர்கள் பிறந்த நாளிலேயே இறக்கவுஞ் செய்வார்கள் என்ற ஆங்கிலேயரின் நம்பிக்கைக்கும் இக் கணிப்பு ஏற்புடையதாகவுள்ளது.

இலண்டனுக்கு 100 மைல் வடக்காகவுள்ள ஸ்ராற்போட் அப்போன் அவன் (Stratford-upon-Avon) சேக்ஸ்பியர் பிறந்த சந்தைப் பட்டணம். தந்தையார் ஜோன் சேக்ஸ்பியர் தோல் பதனிடும் தொழில் நடத்தியவர். தானிய வியாபாரமும் செய்தவர். தாயார் மேரி ஆர்டன் பெரும் நிலவுடைமையாளரின் மகள். இவர்களுக்கு எட்டுப் பிள்ளைகள். வில்லியம் சேக்ஸ்பியர் மூன்றாமவர்.

சேக்ஸ்பியர் சொந்தவூர்ப் பாடசாலை ஒன்றிற் கற்றுத் தேறினார். பல்கலைக்கழகத்துக்கு அவர் செல்லவில்லை. காரணம் வசதியாக வாழ்ந்த அவரது தந்தையார் கடனாளி ஆனமைதான் என்று சொல்லப்படுகின்றது.

படிப்பித்தல் தொழில் பார்த்த சேக்ஸ்பியருக்கும் ஆன் ஹதவேக்கும் 1582ல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு சூசானா, ஹம்நெற், யூடித் என மூன்று பிள்ளைகள். ஹம்நெற் 11 வயதில் இறந்துவிட்டார். இந்த இழப்பு வில்லியம்-ஆன் தம்பதியரைப் பெரிதும் வாட்டியிருக்க வேண்டும்.

## திருப்புமுனை

1587 சேக்ஸ்பியரின் வாழ்வில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்திய ஆண்டு. இந்த ஆண்டிலே தான் பார்த்த ஆசிரியர் வேலையைத் துறந்து நடிகர் குழு ஒன்றுடன் சேக்ஸ்பியர் சேர்ந்து இலண்டன் சென்றடைந்தார். அக்காலம் இங்கிலாந்துக்கும் இஸ்பானியாவுக்குமிடையில் அடிக்கடி சண்டைகள் நடந்த காலம்.

நாடகக் குழுவில் ஆரம்பத்தில் இவர் குதிரைக் காவலராகவும் பின்னர் அரங்க நிருவாகியாகவும் பதவி வகித்திருக்க வேண்டும் என்றும் படிப்படியாக நாடகப் பிரதிகள் எடுத்தல், அவற்றைச் சீர்செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் நம்பப்படுகின்றது. இந்தக் காலமே நாடகம் எழுதும் முறை, நாடகத் தயாரிப்பு, அரங்கேற்றம், அரங்க அமைப்பு, நிருவாகம் போன்ற பல நுணுக்கங்களை அவர் கற்றறிந்த காலமாக இருத்தல் வேண்டும்.

1592ஆம் ஆண்டளவில் சேக்ஸ்பியர் நன்கு அறியப்பட்ட நடிகராகவும் நாடக எழுத்தாளராகவும் வளர்ந்துவிட்டார். குளோப் அரங்க (Globe Theatre) தயாரிப்புகளில் சிறு பாத்திரங்கள் தாங்கி நடித்தும் எழுத்துப் பணிகள் புரிந்தும் வெளிச்சத்துக்கு வந்த சேக்ஸ்பியரின் திறமை குறித்துப் பலருக்குச் சந்தேகங்களும் எழுந்தன.

## இரவல் எழுத்தாளர்?

உறொபேட் கிறீன் என்ற நாடக எழுத்தாளர் சேக்ஸ்பியர் பிற நாடக எழுத்தாளர்களின் உத்திகளைத் திருடுபவர் என்று குற்றஞ் சாட்டினார் கிறீன் பல்கலைக்கழகப் படிப்பாளி. எனினும் அந்த அளவுக்குப் படிப்பில்லாத சேக்ஸ்பியரின் எழுத்துக்கள் மக்களைக் கவரவே கிறீன் மற்றும் மார்லோ, கைட், ஜோன்சன் (Marlowe, Kyd, Jonson) போன்ற நாடகப் பிர-பலங்களின் பெயர்கள் மங்கத் தொடங்கின. சேக்ஸ்பியர் பணியாற்றிய குளோப் அரங்கத்துக்கு மதிப்பு அதிகரித்தது. அதனால் அவருக்கு எழுந்த எதிர்ப்பு அழுக்காற்றின் விளைவாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

அதேவேளை சேக்ஸ்பியர் பல கதைகளையும் கருத்துக்களையும் பிறரிடமிருந்து எடுத்திருக்க லாம் அல்லது அவர் பணியாற்றிய கம்பனியால் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஆய்வாளர் நம்புகின்றனர். கம்பனி பழைய கதைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை நாடகம் ஆக்கும்படி சேக்ஸ்பியரைப் பணித்திருக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. சேக்ஸ்பியரின் நாடகக் கதைகள் பல அவருக்கு முன்னதாகவே Chaucer, Plutarch, Holinshed போன்ற புகழாளர்களால் எழுதப்பட்டவையாகும். நாட்டுக் கதைகளைக்கூட முழுமையாகவோ பகுதி களாகவோ சேக்ஸ்பியர் தமது நாடகங்களிற் பயன்படுத்தியிருக்கின்றார்.

இவற்றினால் மட்டும் சேக்ஸ்பியர் பெயர் பெற்றிருப்பார் என்று சொல்வதற்கில்லை. அவர் இயற்கை உணர்வும் உலகியல் வாழ்க்கை பற்றிய அனுபவ அறிவும் மிகுந்த எழுத்தாளர். அதற்கும் மேலாக அவர் ஓர் உன்னத புலவர். கவர்ச்சியாகக்கவிதை எழுத வல்லவர். அதனால் அவரது உலக தத்துவங்களும் கவித்துவ வரிகளும் மக்களைக் கவர்ந்திருக்க வேண்டும். பல்கலைக்கழக எழுத்தாளர் உயர் மட்டத்தினருக்கே பெரிதும் எழுதினர். சேக்ஸ்பியர் பொதுமக்களுக்கும் எழுதினார் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

## கைகொடுத்த கவித்திறம்

1592ல் தொற்றுநோய் காரணமாக நாடகக் கம்பனிகள் மூடப்பட்டன. வேலையிழந்த நிலையில் சேக்ஸ்பியர் பாடல்களை அதிகம் எழுதினார். 1593ல் Venus and Adonis என்ற தொகுதியை வெளியிட்டார். 1594ல் The Rape of Lucree என்ற பெயரில் மற்றுமொரு கவிதைத் தொகுதியை வெளிக் கொணர்ந்தார்.



கவிஞர் வி. கந்தவனம்


Credit Recovery Point

உங்கள் கடன் (Credit) பிரச்சினையால் வாழ்க்கையில் ஏற்படும் சுமையை நாங்கள் இறக்கி விடுகின்றோம்.

உங்களுடன் தமிழ்மொழியில் உரையாடி உங்கள் துன்பத்தை தூரத்தி விடுகின்றோம்.

சகல ஆலோசனைகளும் இலவசம்

உங்களுக்கு உடன் உதவிட நாம் தயார்!
நீங்கள் தயாரா? எங்களது விசேடமான உதவிகள்

வங்குறோத்து (Bankruptcy) அடையாமல் உங்கள் கடனை இலகுவழியில் தீர்க்க சட்டதிட்டங்களுக்கு அமைய வழிமுறைகளைக் கையாளுதல்.

அழியாச்சொத்தை வைத்துக் கொண்டு மற்றைய கடன்களிலிருந்து விடுபட உதவிபுரிதல்

நீங்கள் கடன் பெற்ற நிறுவனத்தின் தொலைபேசி அழைப்புகளால் உங்களை மனவழுத்தலுக்கு செல்லாமல் தவிர்த்தல்

உங்கள் மேல் சட்ட நடவடிக்கையெடுத்து உங்கள் வருமானத்தை இடைநிறுத்துவதை வென்றெடுத்தல்

உங்கள் பல கடன்களை ஒன்றாக்கி மாதாமாதம் சிறு தொகை கட்ட ஒழுங்கு செய்தல் மேலும் கூடுதலான வட்டியை நிவர்த்தி செய்தல்

உங்கள் கடன் அறிக்கையில் (Credit Report) உள்ள பழைய தகவல்கள்/தவறுகளையகற்றிட உதவிபுரிதல்

மீண்டும் நீங்கள் கடன் பெற வழிசமைத்தல்

CREDIT RECOVERY POINT

WE PROVIDE FREE & PROFESSIONAL ADVISE IN TAMIL & ENGLISH

We are the Pioneers of credit Recovery for our Community. Others Imitate we Create.

OUR SPECIAL SERVICE

MORTGAGES - 1st & 2nd (Bank & Private)
Commercial Mortgages - 1st & 2nd ( Bank & Private)
Refinancing & Consolidation ( Bank & Private)
Mortgage Renewal - Real Estate Needs
Buy and Sell Homes & Investment Properties
Line of Credit & Credit Cards

BANKRUPTCY ADVICE - How to avoid
Consumer proposal & Credit Counseling advice
Credit Repair - Credit Rehabilitation

VARIOUS IMMIGRATION MATTERS
Legal Advice - Criminal, Civil & Family Matters
CRA - Revenue Canada Tax Issues
OSAP - Student Loans Matters
Traffic Violations - Criminal & HWY Traffic Act

www.crpoint.ca CR Point

Tel : 416-412-6363
Cell : 416-856-5154
Fax : 416-412-1206
5200 Finch Ave. East, Suite 300, Scarborough, ON.
Email : crpoint300@gmail.com

Saba Inthiran
Financial Advisor

ALL CONSULTATIONS ARE FREE

# உடல் நிலை பாதிப்பால் தொழில் வருமானம் இழந்தவர்களுக்குரிய காப்புறுதி திட்டம்

## வினா விடை தொடர் - 23 -

**வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டு உடல் காயம் அடைந்த ஒருவர் தமது வாகன காப்புறுதி திட்டத்தில் இருந்து எத்தகைய இழப்பு நிவாரணங்களை பெறலாம்?**

• வருமான இழப்பீட்டு நிவாரணம் (Income Replacement Benefit)

• உழைப்பு எதுவும் இல்லாதோருக்கு நிவாரணம் (Non Earner Benefit)

• பராமரிப்பவர் சலுகை நிவாரணம் (Care giver benefit)

• மருத்துவ, புனர்வாழ்வு & தாதிகள் பராமரிப்பு நிவாரணம் (Medical, Rehabilitation & Attendant care benefits)

• ஏனைய செலவுகளுக்குரிய கொடுப்பனவுகள் (Payment of other Expenses)

• உயிர்இழப்பு நிவாரணமும், மரணச் சடங்கு செலவு நிவாரணங்கள் (Death & Funeral Benefits)


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


• விரும்பினால் பெற வசதியுள்ள ஏனைய செலவு நிவாரணங்கள் (Optional Benefits)

**வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு உடல் காயம் அடைந்த ஒருவர் வாகன காப்புறுதி திட்டத்தில் இருந்து பெறும்**

**"வருமான இழப்பீட்டு நிவாரணம்"** (Income Replacement Benefit) **என்றால் என்ன? பாதிக்கப்பட்ட ஒருவர் அதனை பெற்று கொள்ள எத்தகைய நிபந்தனை-களை எதிர்கொள்ளல் வேண்டும்?**

வாகன விபத்தில் உடல் காயம் அடைந்த ஒருவர் விபத்தில் சரி பிழை என்பது எந்தப் பக்கம் இருந்தாலும், தமது வாகன காப்புறுதி திட்டத்தில் இருந்து விபத்துக்கு முதல் எவ்வளவு தொகை தமது தொழில் வருமான-மாக பெற்று வந்தாரோ அத்தேறிய வருமானத்தில் இருந்து 80%வீதத்தினை இப்பிரிவின் கீழ் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் இப்பிரிவில் இருந்து நிவாரணம் பெறவேண்டுமானால் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

1. விபத்து நடந்த நேரம் ஏதாவது ஒரு தொழில் வருமானத்தில் வாழ்க்கை இருந்து இருத்தல் வேண்டும். இவ்விபத்தினால் தொடர்ந்து செய்து வந்த தொழிலை செய்ய முடியாதவர் என்ற நிலைமைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. சில நேரங்களில் விபத்து நடந்த நேரம் தொழில் எதுவும் இல்லாது இருந்திருந்தால்

a) கடந்த ஐம்பத்தியிரண்டு கிழமைகளில் கடைசி இருபத்தியாறு கிழமையேனும் தொழில் செய்து, விபத்து நடந்த நேரம் வேலை எதுவும் இல்லாதிருப்பினும் வேலையற்றோர் காப்புறுதி திட்டத்தில் இருந்து வருமானம் பெறுபவராக இருத்தல் வேண்டும்.

b) விபத்து நடப்பதற்கு முதல் ஒரு வருடத்தினுள் ஏதாவது ஒரு வேலையில் சேரப் போகின்றார் என்ற ஒரு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருத்தல் வேண்டும்.

(நடந்த விபத்தின் காரணமாக உடல்நிலைமை பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத நிலைமையில் உள்ளார் என்பது மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபித்தல் வேண்டும்)

விபத்து நடந்த முதல் ஒரு கிழமைக்கு எதுவிதமான நட்டஈடும் வழங்கப்படமாட்டாது.

இரண்டாவது கிழமையில் இருந்து வருமானத்தில் 80% வீதமாக ஆக கூடியது கிழமைக்கு $400 டொலர் வரை கிடைக்கும்.

(வாகன காப்புறுதி ஒப்பந்தத்தின் 'விபத்து பிரிவில்' மேலதிக சற்று பணம் செலுத்தி இவ்வருமான நிவாரண பணத்தினை கூடுதலாக பெறும் ஒப்பந்தம் சேர்ந்து இருந்திருந்தால் கிழமைக்கு $600, அல்லது $800, அல்லது $1000 டொலர் வரை பெறலாம்)

விபத்து நடந்த நாளில் இருந்து 104 கிழமைக்கே இப்பிரிவில் இருந்து நிவாரணம் வழங்குவார்கள். 104 கிழமைகளுக்கு பின்பு உடல் நிலைமை சீராகா விட்டால் நட்ட ஈட்டினை தொடரலாம். எப்படியிருந்தாலும் 65 வயதுடன் ஓய்வூதியத்திற்கு போவதால் இது நிறுத்தப்படும்.

**வாகன விபத்தில் 'உழைப்பு எதுவும் இல்லாதோர் நிவாரணம்'** (Non Earner Benefits) **என்றால் என்ன? இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெற தகுதியுடையவர் யாவர்?**

a) விபத்தில் உடல் காயமடைந்தவர் மேலே குறிப்பிடப்பட்ட 'வருமான இழப்பீட்டு நிவாரணம்' பெற தகுதியில்லாதவர் மற்றும்

b) பராமரிப்பவர் சலுகையும் (Caregiver benefit) பெறமுடியாதவர்.

c) எதுவிதமான தொழில் வருமானமும் இல்லாது முழு நேரமாக கல்வி கற்கும் மாணவர்கள் இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெறலாம்.

அதாவது கிழமைக்கு $185 டொலர் வழங்கப்படும். அதுவும் விபத்து நடந்த முதல் 26 கிழமைக்கு நட்டஈடு கிடையாது.

26 கிழமைக்கு பின்பே நிவாரணம் கிடைக்கும். தொடர்ந்து 104 கிழமைக்கு பின்பும் உடல் நிலைமை தேறாவிட்டால் தொடர்ந்து கிழமைக்கு $320 டொலர் பெறலாம்.

(சமூக உதவி பணம் பெறுபவராக இருந்தால் இந்நிவாரணம் அப்பணத்தொகையில் கழிக்கலாம் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று)

**பராமரிப்பவர் சலுகை நிவாரணம்** (Caregiver Benefit) **என்றால் என்ன? இப்பிரிவில் நிவாரணம் பெற விபத்துக்கு உள்ளானவர் எந்த வகையில் தகுதியானவர்?**

உதாரணமாக இதனை பின்வருமாறு தெளிவுபண்ணலாம். விபத்தில் காயமடைந்தவருக்கு இரு பிள்ளைகள் இருந்தால் இவரது வருமானம் விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கும்போது தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு என வழங்கும் சலுகையே இதுவாகும்.

ஒரு குழந்தையின் பராமரிப்புக்காக கிழமைக்கு $250 டொலர் வழங்குவார்கள். மேலதிக ஒவ்வொரு குழந்தைக்கும் $50 டொலர் மேலதிகமாக வழங்குவார்கள்.
ஆனால் ஒன்று!
இப்பிரிவில் இருந்து நிவாரணம் பெறுபவர் மேலே குறிப்பிடப்பட்ட 'வருமான இழப்பீட்டு நிவாரண' பிரிவில் இருந்தோ அல்லது 'உழைப்பு எதுவும் இல்லாதோர் நிவாரண' பிரிவில் இருந்தோ எதுவிதமான நிவாரணமும் பெறுபவராக இருத்தல் வேண்டும்.




# ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



| | |
|---|---|
| **Beach Summer Cottage Brick House 40 Acre Farm $300,000 HWY 48 (Markham Rd.)** | **Senior Future Home Milton 5 Acre with Hobby Farm $380,000** |
| **Investment Bungalow House with big lot Scarborough Area $275,000** | **Mechanic Shop / House Scarborough Area House + Business** |
| **Big land lots Bangalow 3 bedroom House Airport / Brampton Mississauga $250 - 300,000** | **Sell Your House No Co-Op Broker 1% Commission** |

**வீடும் வியாபாரமும் Business Zoning**

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.



**நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அபிவிருத்தி பழைய மாணவர் சங்கம் கனடா ஒன்றியம் கோடை கால ஒன்று கூடல் - 2008**

இடம் - Morningside Park - Area 5 (Morningside & Ellesmere)

காலம் - 19.07.2008 சனிக்கிழமை, மு.ப 9.00 - பி.ப 7.00 மணி

க. குலராஜேந்திரம் - 416.286.0895    க. சிவா - 416.505.2461

# மார்புவலி வராமல் தடுத்து வாழ

## நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 23)

## CHEST PAIN

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். ஆனால் அந்த வாழ்வை அடைவதற்குரிய வழிமுறைகள்பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை.

ஒருவனுக்கு நோய் வந்து வேதனைகளை அனுபவிக்கும் போது அதிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பதையே சிந்திக்கிறான். ஆனால் அந்த நோய் ஏன் வந்தது எப்படி வந்தது என்பது பற்றி சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை. அப்படி யோசிப்பவனாயிருந்தால் அவன் நோய் வராமல் தடுத்து வாழமுடியும். நோய் அவனை இறுகப் பிடித்த பின்பு யோசித்து என்ன பயன்.

மனிதருக்கு வரும் எல்லா நோய்களும் மலச்சிக்கல், உணவு செரியாமை, இரத்த அழுத்தம், நரம்பு கோளாறுகள், உடலில் படிந்துவிடும் அதிக கொழுப்பு, மனோபலம் இல்லாமை போன்ற காரணங்களாலேயே உருவாகின்றன என்பதுதான் உண்மை. இவ்வாறு உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு நோய்கள் உருவாகும் போதுதான் நாம் மருத்துவரை அணுகி மருந்துகளையும் மாத்திரைகளையும் வாங்கி அந்த நோயிலிருந்து விடுபடமுயற்சிக்கிறோம். இதனால் நோய்கள் மாறலாம். ஆனால் குறிப்பிட்ட மருந்துகள் ஏற்படுத்தும் பக்க விளைவினால் உடல் படிப்படியாக சீர்கெட்டு வருவதை உணர்வதில்லை.

உதாரணமாக மனிதரைத் தழுவிக் கொள்ளும் உடனடி நோய்களில் இரத்த அழுத்தமும் (Blood Presure) ஒன்று. இது மற்றொரு நோயை உண்டாக்கு வதற்குரிய ஓர் அடையாள நோயாகும். இரத்தக்குழாய்களின் சுவர்களில் கொழுப்புச்சத்துகள் சேர்ந்து அது தடிப்பதால் அந்த சுவர்களின் அளவு சுருங்குகிறது. இதனால் இரத்த ஓட்டத்தின் வேகம் குறைகிறது. அப்போதுதான் மார்பு வலி உருவாகின்றது.

இந்த மார்பு வலி வருவதற்கு என்ன காரணம்? இரத்த அழுத்தம் குறைந்து விடுவதுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மார்பு வலி ஏற்படும் போது உடனடி சிகிச்சை முறைகள் என்னவாக இருக்கும். முதலில் இருதயநோய் நிபுணரை அணுக வேண்டும். மார்புவலி வந்தால் மாரடைப்பு (Heart Attack) வருமோ என்று பயப்படத்தேவையில்லை. மார்பு வலி வேறு மாரடைப்பு வேறு. மார்பில் உள்ள இதய தசை நார்கள் இரத்தம் தடைப்படும்போது எடுக்கும் வலி ஒரு துடிப்பு அவ்வளவுதான். இரத்த ஓட்டம் சீர் செய்யப்படுமானால் மார்பு வலி நின்று போகும். இதற்கு டாக்டரிடம் சென்று அதற்குரிய மருந்தை உபயோகிப்பது உடனடி நிவாரணமாகும்.

**யோகாசன சிகிச்சைதான் நிரந்தர தீர்வாகும்.**

இரத்த ஓட்டத்தைச் சீர்செய்யவும் மார்புவலி (Chest Pain) வராமல் தடுக்க சில யோகாசன முறைகள் இருக்கின்றன. அதனைத் தொடர்ச்சியாக செய்து



வந்தால் மார்பு வலி வராது. மனம் அமைதி பெறும். மகிழ்ச்சி தோன்றும். எல்லாவற்றிற்கும் பொறுமையும் தைரியமும்தான் முதலில் தேவை.

**தனுராசனம் (Bow) பலன்கள்**

இரத்த ஓட்டம் செம்மையாக முதுகுகெலும்பு வழியாக உடலுறுப்புகள் எல்லாவற்றிற்கும் சமசீராக ஓடிக்கொண்டிருக்கும். அத்துடன் மார்புக்கூடு நிலத்தில் நன்றாக அழுத்தப்படுவதால் தசை நார்கள் இளகுவதால் மார்பு பலம் பெறுகின்றது. அத்துடன் உடலிலுள்ள அழுக்குகள் நன்றாக வெளியேற்றப்படுவதால் இரத்தம் சுத்தமாகின்றது.

**மீன் ஆசனம் (Fish Pose) பலன்கள்**

உடல் பின்புறமாக வளைவதால்



மார்பகம் விரிந்து இரத்த ஓட்டம் மார்பில் அனைத்து பகுதிகளுக்கும் சரியாகப் பாய்வதால் மார்பில் வலி தோன்ற வாய்ப்பில்லாது போகின்றது.

**புஜங்காசனம் (பாம்பு ஆசனம்)**

இந்த ஆசனத்தைச் செய்வதால் மார்புவலி மட்டுமன்றி வயிற்றுப்பகுதியில் ஏற்படும் அனைத்து வலிகளும் வாயுத்



தொல்லையையும் நீங்கும். ஏனெனில் இந்த ஆசனத்தால் வயிற்றுப்பகுதியில் தசைகள் இழுக்கப்படுகின்றன. முதுகு எலும்புகள் பலம் பெறுவதால் மார்புப்பகுதி நன்றாக விரிந்து சுருங்கும் நிலை ஏற்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஆசனங்களுடன் ஒட்டகாசனம் (Camal Pose), பிறையாசனம் (Star Pose) போன்றவைகளும் மார்புவலி வராமல் தடுக்க உகந்த ஆசன முறைகளாகும்.






ஆரோக்கிய வாழ்வு

N. செல்வஜோதி

416.289.2033 after 7:00pm



mhc

MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems

HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210

At Middle Field, Scarborough, M1S 4Z4






N. SELVAM

YARL WINDOW BLINDS & DRAPERY

406 Elson St., Markham Ontario L3S 4R8

Tel: 416-806-5397, 905-201-7733

# மூலிகைப் பொருட்களின் இரச, குண, வீரிய வியாகங்களுக்கு ஏற்ப குணமாற்றும் வியாதிகள்

## கடந்த இதழ் தொடர்ச்சி

அடுத்து வருவது மூலிகையில் அகத்தி ஆகும். இது சீதவீரியம் பொருந்தியது. குளிர்ச்சியை உண்டாக்க வல்லது. இதன் தாவரவியல் பெயர் "Sesbania Grandiflora" ஆகும். சுவையில் துவர்ப்புத்தன்மையானது. இதில் பயன் படுத்துவது வேர், பட்டை, இலை, பூ என்பன ஆகும். இங்கு சில வேளையில் இலைப்பகுதி மாத்திரம் பெறக்கூடியதாகவுள்ளது. நமது தமிழ் வர்த்தகர் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.



இதில் செவ்வகத்தி இனமும் உண்டு. அது இங்கு கிடைப்பது அரிது. அகத்தி இலையை எடுத்துத் துப்பரவு செய்து பாவிக்க வேண்டும். நமது உடம்பில் உள்ள வெப்பத்தை அகற்றக்கூடிது. துப்பரவு செய்த அகத்தி இலையை எடுத்து இடித்துச் சாற்றை எடுத்து உடம்பின் வெளிப்புறத்தில் பூசிவர வெப்புத் தன்மை அகன்று விடும்.

கடுமையான மது போதையில் வெறித்தன்மை கூடியிருந்தால் அகத்தி இலைச்சாற்றை எடுத்து தலைப்பகுதியில் வைத்து தேத்து முழுகிவிட்டால் வெறித்தன்மை அகன்று விடும். சுயநிலை பெற்றுவிடுவார்.

அகத்தி இலையை நன்கு துப்பரவு செய்து சொதி வைத்து நாம் உண்ணும் உணவுடன் சேர்த்துப் பாவித்துவர உடம்பில் உள்ள வெப்பம் தணிந்து வாய் பகுதியில் ஏற்படும் அவியலும் அகன்று விடும். அத்துடன் வயிற்றில் தங்கியுள்ள புழுக்கள் மலத்துடன் வெளிவரும்.

இந்த அகத்திகீரையை ஒரே ரோகிக்கு மூலிகை மருந்து கொடுக்கும் போது பாவிக்கக்கூடாது. கொடுக்கும் மருந்தின் தன்மையை முறித்து விடும். கொடுக்கப்படும் மூலிகை மருந்துகள் பயன்தராது. எனவே மற்றும் வேளைகளில் நிலையறிந்து பாவித்து வரலாம்.

இந்த அகத்தி இலை சில வேளைகளில் நமது தமிழ் வர்த்தகர் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். இதனைப் பெறுமிடத்து குளிர்சாதனைப் பெட்டியில் வைத்துப்பாவனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanaka)
C.D.S - C.N.H.P (Canada)


அடுத்து வெற்றிலைப் பற்றிப் பார்ப்போம். இதனை இலட்சுமி கடாச்சம் பொருந்திய மூலிகையாக வர்ணிப்பர். தாம்பூலம் - வெற்றிலை என அழைப்பதுண்டு. இதன் தாவரவியல் பெயர் Piper Betel ஆகும். துவர்ப்புச் சுவையாக கொண்டது. சீதவீரியத் தன்மை இருப்பதினால் குளிர்ச்சியை உண்டாக்கும். உமிழ்நீரை நன்கு சுரக்கக் கூடியது. வயிற்றில் உள்ள வாயுத் தன்மையை அகற்றிவிடும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டக்கொடுக்கும் தாய்மாருக்குப் பால்சுரப்பைத் தூண்டி பாலை அதிகம் சுரக்கச் செய்யும். இந்த வெற்றிலையைப் பாவிக்கும் போது வெற்றிலையின் காம்புநுணி நடு நரம்புப் பகுதி நீக்கிப் பாவிப்பது சாலச்சிறந்தது.

வெற்றிலையுடன் துப்பரவு செய்த பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துப் பாவிக்கும் போது ஏற்படுகின்ற உமிழ்நீர் சாற்றினால் கபக்கட்டு (சளி) நீங்கி நெஞ்சில் உரம் உண்டாகும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் தாய்மாருக்கு மார்பில் முலைப்பகுதியில் கட்டித் தன்மை ஏற்பட்டு வீக்கத்துடன், வேதனை காணப்படும்போது, வெற்றிலையை எடுத்து தணலில் ஓரளவு வாட்டி (இளஞ்சூடு) உரிய இடத்தில் விட்டு விட்டுப் பிடிக்க மாற்றம் ஏற்பட்டு சுகநிலை காணப்படும்.

நாம் உண்ட உணவு செமியாமல் வயிற்றுவலியும், ஓங்காளமும் காணப்பட்டால் வெற்றிலையை நன்கு துப்பரவு செய்து சுத்தமான நீரில் அலசி சிறு, சிறு துண்டுகளாகக் கிழித்து எடுத்து, அத்துடன் துப்பரவு செய்த பாக்கின் சீவலையும், ஓரளவு சுண்ணாம்பையும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் இட்டு ஒரு சுண்டு சுத்தமான தண்ணீரையிட்டு நன்கு கொதிக்கும்வரை சூடாக்க வேண்டும். அவ்வேளையில் பார்க்கும் போது நன்கு சிவப்பு நிறத்தன்மையாகக் காணப்படும். (ஒரு சுண்டு தண்ணீரில் ½ சுண்டு தண்ணீர்வரை வற்றும் வரை விட வேண்டும்) பின்பு இறக்கி இளம் சூடாக ½ கிளாஸ் எடுத்துப் பருகினால் செமிபாடு நீங்கி வயிற்றுப் பகுதிவற்றிக் காணப்படும். முட்டுத்தன்மை, வயிற்றுப்பிரட்டல் யாவும் தணிந்து சுகதேகியாகக் காணப்படுவார்.

## செம்பரத்தை

இதன் தாவரவியல் பெயர் Hibiscus Rosa-sinensis ஆகும்.

இதன் இலை, பூ, வேர் என்பன பாவனைக்கு எடுப்பதாகும். நம்நாட்டில் எல்லாஇடங்களிலும் மிக எளிதாகக் கிடைக்கும். சீதவீரியத் தன்மை உடையது. குளிர்ச்சியை ஏற்படுத்தி வரட்சி நிலையை மாற்றிக் கொள்ளும். இதன் இலையைமென்று தின்றால் வழவழப்பாக இருக்கும். இதன் பூ நல்ல சிவப்பாகவும், அழகாகவும் இருக்கும். இந்தப் பூக்களில் இரு இனம் உண்டு. ஒன்று ஒற்றைவரிசையுடையது. மற்றது. இரட்டைவரிசையுள்ள அடுக்குச் செம்பரத்தம்பூ ஆகும். ஆனால் இரண்டும் ஒரே செயலும், குணமுள்ளதாகும். இந்தப் பூவை ஆங்கிலத்தில் சைணா ரோஸ் என அழைப்பார்கள்.

இந்த பூவில் தங்கச்சத்து நிறைந்து உஸ்ணத்தைத் தணிக்ககூடியது. பூவினை முறைப்படி குடிநீர் செய்து பாவித்துவர சிறுநீர் நோய்களைக் கண்டிக்கும் தன்மையுடைது. சப்த தாதுக்களினால் ஆன உடம்புக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும்.

செம்பரத்தும்பூவின் சாற்றை எடுத்து தேங்காய் எண்ணெய் சேர்த்து சிறு தீயிட்டு நீர் சுண்டும் வரை எரித்து எடுத்து ஆறியபின்பு ஒரு குப்பியில் இட்டு வைத்துக்கொண்டு அதில் ஓரளவு எடுத்து தலையில் வைத்துக் கொண்டுவர குளிர்ச்சி ஏற்பட்டு மயிர்கள் கறுத்து நீளமாக வளரும்.

இதன் பூவை பச்சடியாகவோ, துவையலாகவோ உட்கொண்டு வந்தால் கணச்சூடு, எலும்புருக்கி, உடல் எரிவு தலைவலி, தலைப்பொடுகு வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு எரிவு, ஈரல்



கோளாறு யாவும் நிவர்த்தியாகும்.

செம்பரத்தம்பூ உஸ்ணத்தை தணிப்பதினால் சிறு நீர்பையிலும் (Urinary Bladder) இருதயம், கல்லீரலில் (Liver) ஏற்படும் வியாதிகளைக் நீக்குவதுடன் எவ்வித நோயும், ஏற்படாது பாதுகாக்கும் தன்மையுடையது. ஓயாத தலைவலி, கண்களினால் நீர்வடிதல், கண்குற்று, பீழைசாடுதல் முதலியவற்றுக்கு 2, 3, 4 பூக்களை எடுத்து காம்பு நீக்கி துப்பரவு செய்து பசுவின் பால்விட்டு அரைத்து தலையில் தப்பி ½மணி நேரத்திற்குப்பின்பு முழுகிவர பூரண குணம் கிடைக்கும். எனவே சரியான காரணங்களைக் கண்டு கையாளவேண்டியது அவரவர் கடமையாகும்.

வெள்ளை, வெட்டை நோய் ஏற்பட்டிருப்பின் பூவை எடுத்துத் துப்பரவு செய்து அரைத்து பசுவின் பாலில் கலக்கி காலை ஆகாரத்தின் 3 நாட்கள் மட்டில் சாப்பிட்டுவர குணம் கிடைக்கும். சாதாரணமாக துப்பரவு செய்த பூவின் காம்புகளை நீக்கிமென்று சாப்பிட்டு வந்தாலும் அதன் பலம் கிடைக்கும்.

நீர்கடுப்பு, நீர்எரிச்சலால் கஸ்டப்படும் நிலையில் உள்ளவர்கள் செம்பரத்தம் பூவை எடுத்து துப்பரவு செய்து காம்பு நீக்கி கசாயம் செய்து காலை, மாலை 3 மேசைக்கரண்டி பாவித்துவர குணம் கிடைக்கும்.

செம்பரத்தையின் இலையும் குளிர்ச்சி யுண்டாக்கும் தன்மையுடையது. எரிவு நீக்க வல்லது. இலையை எடுத்து நன்கு துப்பரவு செய்து இடித்து தலையில் தேய்த்து முழுகிவர பயனளிக்கும்.

எனவே எதை எவர் பாவித்தாலும் சரியான காரணத்தை நன்கு அறிந்து செய்து கொள்வது சாலச்சிறந்தது.

- தொடரும்


**SHAWN TRUCK & FORKLIFT**

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan

**416.913.9574/416.829.0603**



**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

- *வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள்*
- *இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)*
- *இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)*



**416-332-8451**

Finch / Middlefield

# இயற்கையான பலவீனம்

## ஓடும் நீர் உறைவதில்லை 65

நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பது நம்மைப்போல் இன்னொருவர் இதுவரை பிறந்ததும் இல்லை இனிமேல் பிறக்கப்போவதும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது ஆகும். இந்தத் தனித்துவமானது உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நம்மை மற்றவர்களில் இருந்து வேறுபடுத்துகின்றது. உடலியல் ரீதியில் சிலசமயங்களில் இருவர் ஒரேமாதிரியான தோற்றப்பாட்டைப் பெற்றிருப்பதாகத் தோன்றும். இந்தத் தோற்றப்பாடானது குறிப்பாக இரட்டைக் குழந்தைகளில் காணலாம். எனினும் இந்தத் தோற்றப்பாட்டில் காணப்படும் மிகச்சிறிய வேறுபாடானது அந்த இரட்டைக்குழந்தைகளின் தாய்க்கு மிக விளக்கமாகத் தெரியும். அதாவது மற்றவர்களுக்கு இந்த இரட்டைக்குழந்தைகளில் காணப்படும் அந்த வேறுபாட்டை இலகுவில் புரிந்து கொள்ள முடியததாக இருப்பினும் ஒரு தாய்க்கு இது மிக இலகுவானதாகக் காணப்படும். அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களில் இருந்து தனித்துவமானவன் என்பது உடலியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதே.

ஒருவரது மனோபாவங்கள் மற்றவர்களில் இருந்து வேறுபடுவதும் இந்தத் தனித்துவத்தின் இயல்பாகும். ஒருவரது மனோபாவங்களின் வளர்ச்சியானது எவற்றால் தீர்மானிக்கப்படு கின்றன என்பதை நாம் சிறிது ஆழமாக நோக்குவோமாயின் பலகாரணிகள் அடிப்படைகளாகின்றன. இந்தக் காரணிகள் எவையென நாம் வகைப்படுத்த முயல்வது எல்லையற்ற ஒருவிடயத்தை நாம் ஒரு எல்லைக்குள் திணிப்பதற்கு முயற்சிப்பதாகும். ஏனெனில் ஒரு எல்லையை நாம் வகுக்கும் போது அந்த எல்லைக்குட்படும் விடயங்கள் அனைத்தும் எல்லோருக்கும் பொருந்துவன-வாகவும் அதேநேரத்தில் ஒரேமாதிரியான பெறுபேறுகளைத் தருவனவாகவும் அமைதல் வேண்டும். ஆனால் இவ்வாறான வரைய-றைகள் அவ்வாறான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதில்லை. ஒருவரது மனோபாவங்கள் எவ்வாறு உருவாக்கப்படு கின்றன என்பதை மிக இலகுவாகக் குறிப்பிடுவதாயின் அவை அவரது சூழலின் தாக்கத்தால் உருவாக்கப்படுகின்றன என்பது பொருத்தமானதாகும்.

இப்போது இந்த 'சூழல்' என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். ஒருவர் அவரது பிறப்பில் இருந்து அவரது சிந்தனை, சொல், செயல் என்பவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும் அனைத்தும் சூழல் என வரையறுக்கப்படல் வேண்டும். ஒரு தாயின் உணர்வில் இருந்து ஆரம்பித்து படிப்படியாக ஒவ்வொரு கணப்பொழுதும் ஐம்புலன்களால் உள் வாங்கப்படும் அனைத்தும் ஒருவரது மனோபாவ வளர்ச்சிக்கான அடிப்படைகளாகின்றன. இவ்வாறு உள்வாங்கப்படும் விடயங்கள் நேர்த்தியானவையாக இருப்பின் ஒருவரது சிந்தனை, சொல், செயல் என்பன சிறந்த நெறிமுறைகளைக் கொண்டனவாகவும் நேர்த்தியற்றவையாக இருப்பின் எதிர்மறையான விளைவுகளைக் கொண்டனவாகவும் அமைகின்றன. இதனால்தான் குழந்தைகளின் ஆரம்பகாலத்தில் இருந்தே அவர்கள் வாழும் சூழலானது மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்படவேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. இந்த நேர்த்தியான சூழல் என்பது ஒரு குழந்தையின் பெற்றோர்களில் இருந்து உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட வேண்டும். இங்கு உடனடியாக என்பது குழந்தை பிறந்ததும் அந்தக் கணப்பொழுதில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏனெனில் குழந்தைகளின் ஆரம்பக் கற்றலானது உணர்வு ரீதியானதாக ஆரம்பிக்கின்றது. அதன் பின்னர் படிப்படியாக அவதானிப்பு மூலம் நகர்த்தப்பட்டுப் பின்னர் பங்குகொள்ளல் மூலம் விருத்தி

KG Master-kgmaster@rogers.com

செய்யப்படுகின்றது.
இந்த மனோபாவ வளர்ச்சிகள் அனைத்தும் சூழலுக்குகேற்ப மாற்றமடையக் கூடியவையாக இருப்பினும் இந்த சூழலின் தாக்கத்துக்குத் தாக்குப்பிடித்து தனது எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அல்லது தனது சொந்தத் தெரிவுகளுக்கு ஏற்றவாறு அதை விரிவுபடுத்தும் தகைமையை நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளோம் என்பது மிகச் சிறந்த ஒரு செய்தியாகும். ஒருவர் எந்தவொரு எதிர்மறையான சூழலில் இருந்தும் தன்னைப் பாதுகாத்து சிறந்த, நேர்த்தியான மனோநிலையை உருவாக்கக் கூடிய தகுதி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நடைமுறையில் அதிகமானவர்கள் இந்த எதிர்மறையான சூழலில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும் பதிலாக அதற்குள்ளேயே அகப்பட்டு அதற்கு அடிமைகளாகி விடுகிறார்கள். இதனால் தான் அதிபெரும் பான்மையானவர்கள் தமக்குத் தாமே அடிமைகளாகி அவதிப்படுகிறார்கள். ஒரு சிலர் நேர்மை, நெஞ்சுத் துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றைக் கருவிகளாக் கொண்டு எந்த இடர்வரினும் தமது உயர்ந்த நோக்கத்திற்கமைய முடிவு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களில் இருந்து பின்வாங்காமல் வெற்றியை நிலைநிறுத்திவிடுகிறார்கள்.

இதுவரையில் நமது மனோபாவங்கள் நமது சூழலின் பங்களிப்பு என்றும் சூழலின் தாக்கங்கள் எவையாயிருப்பினும் அதை நமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக் கூடிய வல்லமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையும் அறிந்தோம். இப்போது இன்னுமொரு முக்கியமான விடயத்தை அறிந்து கொள்வோம். அதாவது நமது இயல்புகளில் சில சூழல்களின் தாக்கத்தால் பாதிப்படைவ தில்லை. இங்கு பாதிப்படைவதில்லை என்பது அந்த இயல்புகள், மனோபாவங்கள் இயல்பாகவே அமைந்திருப்பதாகும். இவ்வாறு இயல்பாக அமைந்திருக்கும் விடயங்கள், குறிப்பாகப் பெண்களுக்குரித்தானவையாகவே அமைந்துள்ளன. இவற்றில் இந்தக் கட்டுரைக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள விடயம் 'இரக்கம்' என்பதாகும்.

பெண்களிடம் இயல்பாகவே காணப்படும் இந்த இரக்கசுபாவம் பற்றிச் சிறிது விரிவாக ஆய்வு செய்வதே எனது நோக்கமாகும். இயற்கையின் கொடையான இந்த இரக்க மனோபாவமே நாம் ஒவ்வொருவரும் தற்போதைய நிலைவரை உயிர்வாழ்வதற்கு வழிசமைத்துள்ளது என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும். நாம் பிறந்த கணப்பொழுதில் இருந்து நாமாகவே எமது விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்தக்கூடிய உளவியல் வளர்ச்சி ஏற்படும்வரை நமது தேவைகள் அனைத்தையும் உணர்வால் உணர்ந்து நிறைவு செய்கின்ற உயர்வான தன்மையை ஒரு தாய்க்கு கொடுக்கும் இந்த இரக்க மனோபாவமானது இயற்கையின் ஒரு மாபெரும் கொடையாகும். இந்த இரக்கத் தன்மையானது பெண்களுக்குரிய சிறப்பம் சமானது மட்டுமல்ல இயல்பானதாகவும் அமைந்துள்ளது.

இப்போது பெண்களிடம் இயல்பாகவே அமைந்துள்ள இந்த இரக்கமானது அவர்களுக்கு எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை நோக்குவோம். இரக்கம் என்பது கொடுப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதாகும். ஒருவர் இரக்கத்தைக் கொடுக்கலாமேயன்றி மற்றவரிடம் இருந்து எடுக்கமுடியாது. அதுமட்டுமன்றி கொடுப்பவர் அதற்குப் பிரதிபலனாக எதையும் எதிர்பார்ப்பதுமில்லை. எதிர்பார்க்கவும் முடியாது. இரக்கத்தைக் கொடுப்பவர் தன்னலமற்ற நிலையில் மட்டுமே மற்றவர்மீது அதைப் பயன்படுத்தமுடியும். அவ்வாறு பயன்படுத்தும் போது இரக்கத்தைப் பெறுபவர் அடையும் மகிழ்ச்சியானது கொடுப்பவருக்கு ஆனந்தத்தை தரும். இதனால் இரக்கமானது கொடுக்கக் கொடுக்கப் பெருகுவதும் அந்தப் பெருக்கம் ஆனந்தத்தைப் பெருக்குவதுமாக அமைந்துவிடுகின்றது.

பெண்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ள இந்த இரக்கமானது அவர்களுக்குரிய ஒரு பலவீனம் என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதே. ஏனெனில் இரக்கத்தை ஒரு கருவியாகக் கொண்டு தனது சுயநலத்திற்கான விடயங்களை மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் இரக்கம் ஒருவழிப்பாதை மட்டுமே. கொடுக்கப்படுவதேயன்றி அதற்குப் பிரதியீடாக எதையும் பெறமுடியாது. இன்னொருவகையில் குறிப்பிடுவதாயின் இரக்கம் என்பது எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராத அல்லது பெறமுடியாத தன்னலமற்ற கொடுப்பனவு மட்டுமே. இதனாலேயே இந்த இரக்கத்தன்மையானது பெண்களைப் பலவீனப்படுத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி மற்றவர்களால் கூட இவர்கள் பலவீனப்பட்டவர்களாக மிக இலகுவாக மதிப்பிடுவதற்கும் வழிவகுத்துவிடுகின்றது.

இந்த இரக்கத்தை ஒரு தாய் தனது குழந்தைக்குக் கொடுக்கும் போது ஊன் உறக்கம் இன்றித் தன்னைப் பலவீனமாக்கிக் கொடுக்கின்றாள். ஆனால் குழந்தையின் சிரிப்பும் சிறப்பும் இந்தப் பலவீனத்தைத் தாய் உணர்ந்து கொள்ளவதற்குத் தடைபோட்டு மகிழ்ச்சி என்ற உணர்வைக் கொடுத்து விடுகின்றது. ஒரு பெண் தனது இரக்கத்தை மற்றவர்கள் மீது செலுத்தும்போது அந்த இரக்கத்தைப் பெறுபவர்கள் அதன்மூலம் நன்மையைப் பெற்றுக் கொண்டும் கூடப் பெண்களைப் பலவீனமானவர்கள் என்று நடந்து கொள்வதும் நடைமுறையில் காணக்கூடியதாக வுள்ளது. அதாவது ஒரு பெண் இரக்கத்தன்மையை செயற்படுத்தும் போது அதைப் பெறுபவருக்கு உண்மையில் உள்ளம் சார்ந்த நேர்மையான உணர்வுபூர்வமான உதவி அல்லது ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என்ற உள்ளுணர்வின் உந்துதலாலேயே செயற்படுத்துகின்றாள். அதாவது உள்ளுணர்வின் உந்துதலேயன்றி வெளிப்புறக்காரணிகளல்ல. சில சந்தர்ப்பங்களில் சிலர் இந்த உள்ளுணர்வின் உண்மையான அர்த்தம் புரியாமல் தவறான கணிப்பீடுகள் மூலம் தமது சுயநலனுக்காக இரக்கத்தைக் கொடுப்பவர்களது வாழ்க்கையை இரையாக்க முயற்சிக்கின்றனர். இதை பெண் உணரமுடியாத அளவுக்கு இரக்கத்தால் பலவீனப்பட்டுள்ளார்கள்.

ஆம் வாசகர்களே!
பெண்களுக்கு இயல்பாக அமைந்துள்ள இந்த இரக்கமானது இயற்கையின் சிறப்பான கொடை-யாக இருப்பினும் அவர்களைப் பொறுத்தவரையில் அதுமுற்று முழுதான பலவீனமே இந்த உண்மையைப் பெண்கள் அறிந்து கொள்வதன் மூலம் விழிப்புணர்வுடன் செயற்படமுடியும். ஏனெனில் பாத்திரம் அறிந்து பிச்சைபோடுவது அவசியம். இரக்கத்தைக் கொடுக்கும் போது ஆரம்பத்தில் அல்லது விரைவாக அதைப் பெறுபவர் பற்றிய இயல்புகளைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். பெறுபவரது நடத்தைகள், பேச்சுக்கள் என்பன எந்தத் திசையில் நகர்கின்றன என்பதை அவதானிப்பது முக்கியம். அப்போதுதான் இரக்கம் கொடுப்பதற்குரியதாயினும் அதைக் கொடுப்பவர் அதைப்பெறுபவரின் சுயநலனுக்கு உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ இரையாக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am Rogers Cable Channel - 20 Bell Expressvu Channel - 219 |

# பைகாரா - குளிரும் சாரலும் விளையாடும் வீடு

குளுமையும் சாரலுமான நீலகிரி மலைத்தொடரில், தனித்துவமான அழகையும் இனிமையையும் தன்னுள் பொதித்து காட்டுக்குள் ஒழிந்து கிடக்கிறது அந்த இடம். புதியவர்களைப் பார்த்து ஒதுங்கி நின்று வசீகரிக்கும் குழந்தைகளைப் போல, சுற்றுலா களேபரங்களில் இருந்து விலகி நின்றாலும், எல்லோரையும் ஈர்ப்பதுதான் அதன் சிறப்பு. மலை முகடுகளின் ஈரக்காற்று, மலைச் சரிவுகளில் திட்டுத்திட்டாய் கொட்டிக்கிடக்கும் குளிர்மேகங்கள், தொட்டுவிடலாம் எனத் தோன்றும் அளவு பக்கத்தில் இருக்கும் அடர் நீலவானம் என சுற்றம்சூழ அழகுப் பட்டாளங்களுடன் மலைச் சரிவில் உருண்டோடும் நீர்வீழ்ச்சியாய் நம்மை ஈர்க்கும் அந்த இடம்தான் பைகாரா!



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 40

நீலகிரி மலைத்தொடர் என்றதும் அனைவருக்கும் நினைவுக்கு வருவது ஊட்டிதான். எல்லோருக்கும் தெரிந்த ஊட்டியில், நகருக்குள்ளும் நகரைச் சுற்றியும் பரவலாகத் தெரியாத பல அற்புதங்கள் மறைந்திருக்கின்றன. ஊட்டி என்ற பிரமாண்டத்துக்குப் பக்கத்தில் இருப்பதாலேயே சுற்றுலாப் பயணிகளால் கண்டுகொள்ளப்படாத இடங்கள் அவை. ஆனால், அதுதான் அவற்றின் தனிச்சிறப்பும்கூட. நெருக்கும் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் இல்லாமல், தனியாக அவற்றை ரசிப்பதே பேரானந்தம். அவ்வளவு இயற்கையின் ரகசியங்களும் ரம்மியங்களும் கொட்டிக்கிடக்கும் பிரதேசங்கள் அவை. ஊட்டி மலை ரயில், அவலாஞ்சி ஆகியவற்றை ஏற்கெனவே பார்த்தோம். நம் பயணத்தை மேலும் தொடர்வோம். பைகாரா நீர்வீழ்ச்சி மற்றும் அதைச் சுற்றிய பகுதிகள் ஒரு புதிய அனுபவத்தை உங்களுக்கு வழங்கும்.



**வழிப்போக்கன்**

ஊட்டியில் இருந்து பைகாரா நோக்கி செல்லும் பயணமே ஒரு பேரனுபவம். பைகாராவுக்கான வழக்கமான சாலையிலிருந்து கோல்ப் விளையாட்டு மைதானம் சாலை வழியே போனால் பிரமாண்ட கோல்ப் மைதானம் பச்சைப் பசேலென விரிகிறது. வாய்ப்பிருந்தால் கோல்ப் விளையாடுவதையும் பார்க்கலாம். ஒரு எல்லை வரை உள்ளே செல்ல அனுமதிக்கிறார்கள். கோல்ப் மைதானத்தைக் கடந்து தொடரும் பயணத்தில், சாலையோரம் இரண்டு பக்கமும் அடர்த்தியாக வளர்ந்து நிற்கும் தடியான காட்டு மரங்கள் நம்மை வியப்புக்குள்ளாக்கும். அடுத்த சில கிலோமீட்டர் பயணத்தில் மரங்களுக்கிடையே தூரத்தில் காமராஜ் சாகர் அணைக்கட்ட தெரியும். இன்னும் கொஞ்ச தூரத்தில் வரும் திருப்பத்தைக் கடந்ததும் அணையை முழுமையாகக் காணலாம். அணையின் கரையில் விரிந்திருக்கும் புல்வெளியில் குதிரைப் பயணம் உண்டு. குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த பயணம். இந்த அணையின் தண்ணீர், கீழே பவானி சாகர் அணைக்குச் செல்கிறது. இங்கிருந்து கிளம்பினால் காடு முன்னைவிட அடர்த்தியாகிவிடுகின்றது. குளிரும் சாரலும் கூட நம்மை தொட்டு விளையாட ஆரம்பிக்கின்றன. அடுத்த அரை மணி நேரத்தில் வந்தடையும் இடத்தின் பெயர் ஒன்பதாவது மைல். அங்குள்ளவர்கள் பேச்சு வழக்கில் “நைன்த் மைல்” என்கிறார்கள்.

ஊட்டியிலிருந்து ஒன்பதாவது மைலில் இருப்பதால் இந்தப் பெயர். இங்கே ஒரு பெரிய மலைமுகடு உயர்ந்திருக்கிறது. அதன் மறுபக்கம் ஏதோ ஒரு ரகசியம் இருப்பதுபோல் மர்ம முகம் காட்டுகிறது மலை. அது நம்மை தன்னை நோக்கி ஈர்க்கும். மெல்லிய புல்வெளியில் காலடித் தடத்தின் வழியே ஏறினால், மலை உச்சிக்குப் போகமுடியும். அங்கிருந்து கீழே பார்த்தால் பிரமாதமான அழகுடன் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் மலைகளையும் மலை யடிவாரத்தையும் பார்க்கமுடியும். கீழே வளைந்தோடும் சாலையில் எறும்பு போல வாகனங்கள் நகருவது தெரியும். ஒன்பதாவது



மைல்-இல் இருந்து அடுத்த பத்து நிமிடப் பயணத் தொலைவில் பைகாரா அருவி வந்துவிடுகிறது. ஓர் எல்லை வரைக்கும்தான் கார்கள் செல்ல அனுமதிக்கிறார்கள். அதன்பிறகு சுமார் அரை கிலோமீட்டர் தூரம் நடராசா வண்டிதான். நடந்து களைத்து நிமிர்ந்தால் புத்துணர்ச்சியுடன் நுரைத்துப் பொங்கும் வெள்ளைப் பல்களால் புன்னகைத்து நம்மை வரவேற்கிறது பைகாரா நீர்வீழ்ச்சி. பரந்த பரப்பில் குதூகலித்து துள்ளி வருகிறது தண்ணீர்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

தமிழகத்தின் எல்லா நகரங்களில் இருந்தும் கோயம்புத்தூருக்கு ரயில், பேருந்து வசதிகள் இருக்கின்றன. கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் சென்று, அங்கிருந்து ஊட்டி, பிறகு பைகாரா செல்லலாம். ஊட்டியில் இருந்து பைகாரா செல்ல வாடகைக் கார்கள் கிடைக்கும். ஒரு நாளைக்கு, நாம் சுற்றிப்பார்க்கும் இடங்களைப் பொறுத்து 1500 - 2000 ரூபாய் வாங்குகிறார்கள். ஊட்டி புகழ்பெற்ற சுற்றுலாத் தலம் என்பதால் தங்கும் இடத்துக்கும் உணவுக்கும் எந்த பிரச்சினையும் இருக்காது. ஆனால், பைகாராவில் படகு இல்லம் அருகே இருக்கும் சுற்றுலாத்துறைக்குச் சொந்தமான ஓர் உணவகத்தை விட்டால் நல்ல உணவகங்கள் குறைவு. ஜூன், ஜூலை, டிசம்பர் போன்ற மழைக் காலங்களைத் தவிர, வருடத்தின் மற்ற அனைத்து மாதங்களும் சீஸன்தான்.

நீலகிரி மலைத் தொடரில் உற்பத்தியாகி பாயும் ஆறுகளில் மிகப்பெரியது பைகாராதான். தோடர் பழங்குடியினர் இந்த ஆற்றை புனித நதியாகக் கருதுகிறார்கள். முக்குர்தி உச்சியில் இருந்து இந்த ஆறு புறப்படுகிறது. பின்னர் பல குன்றுகள் வழியாக பயணம் செய்து வடக்கு பக்கமாக திரும்பி ஓடி, பின்னர் மேற்கு பக்கம் திரும்புகிறது. இந்த ஓட்டத்தின் பல முனைகளில் அருவியாகக் கொட்டி கீழே இறங்குகிறது. இதன் கடைசி இரண்டு அருவிகள் முறையே 55 மற்றும் 61 மீட்டர் உயரத்தில் இருந்து கொட்டுகின்றன. இவைதான் நாம் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கும் பைகாரா அருவிகள்.

நீர்வீழ்ச்சியில் நீராடி, பார்த்து ரசித்து பிரிய மனமில்லாமல் விடைபெற்றால் இன்னொரு இனிய பிரதேசமாக நம்மை வரவேற்கிறது பைகாரா படகு வீடு. வானத்தை நோக்கி வளர்ந்திருக்கும் மரங்களோடு சுற்றிலும் சூழ்ந்திருக்கும் மலைகளுக்கிடையே தேங்கிக்கிடக்கிறது பச்சைத் தண்ணீர். இங்கு 80-500 ரூபாய் வாடகையில் பல வகைகளில் படகு வசதிகள் இருக்கின்றன. துடுப்பு, பெடல், கார் படகுகள் உண்டு. கார் படகில் அதிகபட்சம் 10 பேர் வரை போகமுடியும். மொத்தம் 20 நிமிட படகுப் பயணம். அணையின் அந்த முனைவரை அழைத்துச் செல்கிறார்கள்.

பைகாரா பக்கத்திலேயே இருக்கும் மசினகுடி, விபூதிமலை ஆகிய இரண்டு இடங்களும்கூட பார்த்து அனுபவிக்க வேண்டிய முக்கியமான இடங்கள். மசினகுடி, ஊட்டியிலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. நாற்புறமும் சூழ்ந்திருக்கும் மலைகளுக்கு இடையே படர்ந்து விரிந்திருக்கும் சமவெளியில் அமைந்திருக்கும் அழகிய கிராமம் இந்த ஊர். ஊட்டிக்கு வரும் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் விருப்பத் தேர்வு மசினகுடிதான். அடர்த்தியான காடுகள் நிறைந்த பகுதி என்பதாலும், மலைகளுக்குக் கீழே அமைந்திருக்கும் இடம் என்பதாலும் யானைகள் காட்டு மாடுகள் போன்றவை சாதாரணமாக நடமாடுகின்றன. துள்ளியோடும் புள்ளிமான்களின் கூட்டத்தை பல இடங்களில் காணமுடிகிறது. மசினகுடியைச் சுற்றியுள்ள மாயார், பொக்காபுரம் கிராமங்களில் தோடாஸ், படுகாஸ் இனத்தைச் சேர்ந்த பழங்குடிகள் வசிக்கின்றனர். பழங்குடி குழந்தைகள், தாங்களாகவே தயாரித்த கருவி ஒன்றில் சாலைகளில் வழுக்கிச் செல்வதைப் பார்ப்பது வித்தியாசமான ஓர் அனுபவம்.

மசினகுடியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது விபூதிமலை. அதன் அடிவாரம் வரைக்கும் நல்ல சாலை வசதி உள்ளது. என்றாலும், அதற்கு மேல் ஏறுவது சிரமம். ஆனாலும், ஜீப் போன்ற வாகனங்களில் சென்றால் அதன்பிறகும் ஏறலாம். மலை உச்சியில் சிறிய கோயில் ஒன்று இருக்கிறது. அங்கேயிருந்து நீலகிரி மலையின் பெரும்பகுதியையும் ரசிக்க மிக வசதியான இடம் இது என்பதுதான் விபூதிமலையின் ஸ்பெஸல்! பைனாகுலர் மூலம் கீழே காட்டில் யானைகள், காட்டுமாடுகள் மேய்வதைப் பார்த்து ரசிக்கலாம். இங்கிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில்தான் முதுமலை யானைகள் சரணாலயம் இருக்கிறது. அதுவும் அந்திசாயும் நேரத்தில் இந்த மலை உச்சியில் இருந்தால், மேற்குத் தொடர்ச்சி மலை மடிப்புகளுக்கு இடையே சூரியன் அஸ்தமிக்கும் காட்சி அவ்வளவு அற்புதமாக இருக்கும்.

மசினகுடியில் தங்கும் விடுதிகள் உள்ளன. அங்கே தங்கிவிட்டு, அப்படியே காலையில் புறப்பட்டு சென்றால் முதுமலை யானைகள் சரணாயலத்தைப் பார்த்துவிட்டு ஊட்டி செல்லலாம். யோசியுங்கள்!


கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் நடத்தும்

பட்டதாரிகளுக்கான தொழில் தேடலும்
குழுநிலை உதவியும் - 2008

(Career Fair & Networking for Graduates of Sri Lankan Heritage - 2008)

இடம்: ஸ்காபரோ சிவிக் நிலையம், பிரதான மண்டபம் (Council Chambers), 150 பொரோ றைவ் (Borough Drive), ஸ்காபரோ

திகதி: 2008ம் ஆண்டு யூலை மாதம் 19ம் திகதி சனிக்கிழமை

நேரம்: காலை 10 மணி முதல் பி. ப. 3 மணி வரை

பிரவேசம்: இலவசம்

உலகில் எப்பாகத்திலும் பட்டம் பெற்ற இலங்கைத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் இதில் கலந்து பயன் பெறலாம். மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்குப் பின்வரும் தொலைபேசி எண்களை அழையுங்கள்:

905 513 7771 / 416 949 3157 / 905 426 6042







வாசித்தீர்களா? . JUNE -JULY

கலகலப்பு நகைச்சுவை இதழ் 6

சிரிப்பவர்களுக்குமட்டும் இலவசம்






# மணிதரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காமம்



கதிர் என்றால் ஒளி அல்லது தினை எனப்பொருள்படும். கதிர் என்பதை முதலாகக் கொண்ட கந்தன் ஆலயம் இலங்கையின் தென் பகுதியிலுள்ள கதிர்காமமாகும். எனவே கதிர்காமம் ஒளி மிகுந்த கிராமம். தினை நிறைந்த கிராமம். முருகப்பெருமானின் திருக்கரவேலின் ஒளி அங்கு பிரகாசிக்கின்றது. அத்துடன் தினை விளையும் கிராமமுமாகும். மயூரன் மனம் மகிழ்ந்து உறையும் இடம் மலைப்பகுதியாம் குறிஞ்சிநிலமாகும். குறிஞ்சி நிலக்கிழவன் குமரன் சேயோன் மேய மைவரை உலகு என அவனது இருப்பிடம் சிறப்பிக்கப்படுகின்றது. இயற்கையில் இறைவனைக் கண்டு இன்புற்ற தமிழர் வாழ்விற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தெய்வம் அவன்.

**நா.க.சிவராமலிங்கம்**

முருகன் தமிழ்கடவுள். தமிழரின் மிகத் தொன்மையான வழிபாட்டுத் தெய்வம். முருகு என்றால் அழகு எனப்பொருள். அழகையே கடவுளாகக் கொண்டு பண்டைத் தமிழர் போற்றிய தெய்வம் அவன். அழகு அனைவரையும் ஆட்கொள்ளும் தன்மையது. எனவே அடியவர் அவன்பால் ஈர்க்கப்படுவதில் வியப்பில்லையன்றோ! நீலமயில் ஏறிவரும் கோலக்குமரனது எழில் மிக தோற்றத்தை திருமுருகாற்றுப்படை பின்வருமாறு கூறுகின்றது.

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கும் அவிரொளி
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்.

கதிர்காமத்தில் கந்தன் காவடிக் கந்தனாகக் காட்சி தருகின்றான். காவடி சுமந்து அவனை நாடிச் சென்று பாவடி பாடி சேவடி பணிவர் பக்தர்கள். ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள் உடம்பின் ஆறு ஆதாரங்களை குறிப்பனவாகும். அவையாவன

சிரம் - மூலஸ்தானம் - பழமுதிர் சோலை
புருவம் - அர்த்தமண்டபம் - திருத்தணிகை
கண்டம் - மகாமண்டபம் - திருவேரகம்
மார்பு - ஸ்நபனமண்டபம் - திருஆவினன்குடி
வயிறு - அலங்கார மண்டபம் - திருச்செந்தூர்
ஆசனம் - சபாமண்டபம் - திருப்பரங்குன்றம்

தமிழ் நாட்டில் ஆறுபடை வீடுகள் இருப்பதைப்போன்று இலங்கையிலும் இளமுருகனுக்கு வீடுகள் ஆறுண்டு. அவையாவன செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், சித்தாண்டி, கதிர்காமம் ஆகும்.

மயூரம் ஏறி விளையாடும் முகம் ஒன்று
ஈசனுக்கு ஞான உபதேசம் செய்த முகம் ஒன்று
அடியவர் வினை தீர்த்த முகம் ஒன்று
வேல் வாங்கி நின்ற முகம் ஒன்று
சூரனை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்று

இவை ஆறுமுகம் நிகழ்த்திய அருட்செயல்களாகும்.



ஆன்மா இறைவனுடன் லயப்படுவதற்கு ஆலயம் அமைதியான இயற்கை எழில் கொஞ்சம் காடும் சுனையும் களனியும் சலசலத்து ஓடும் அருவியும் சூழும் இடத்தில் அமைந்திருப்பது அவசியமாகும். குறிஞ்சி நிலமும், கதிரை மலையும், செல்லக்கதிர்காமமும், மாணிக்ககங்கையும் இணைந்து கதிர்காமத்தை தெய்வீகம் மணக்கும் திருத்தலமாக்கியுள்ளன. கதிர்காமத்தில் பூசை செய்வோர் கப்புறாளைமார் எனப்படுவர். இவர்கள் வாய்கட்டிப் பூசை செய்கிறார்கள். கந்தவேள் வள்ளியம்மையை மணம் புரிந்து வாழ்ந்த கிராமம் கார்த்திகேய கிராமம் ஆயிற்று. காலப்போக்கில் அது கதிர்காமம் என்று திரிபு பெற்றது என்பர். இங்கு கந்தவேள் மானிட உருத்தாங்கி அடியவருடன் அடியவராகி அருள்பாலிப்பார் என்பது ஐதீகம். எனவே அடியவரின் பக்திப் பரவசம் பொங்கிப் பிரவாகிக்கும் தெய்வீக பூமி அது. மற்றொரு சிறப்பு பாத யாத்திரையாகும். பண்டைக்காலத்தில் போக்குவரவு வசதிகள் அதிகம் இல்லாததினால் யாத்திரீகர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளில் இருந்து கால்நடையாகவே கதிர்காமம் சென்றனர். போகும் வழியில் காணாமல் போவதுமுண்டு. வனவிலங்குகளுக்கும் இரையாவதும் உண்டு. இதனை மோட்சப்பேறு என்றும் கருதினர். காடுகளையும் களனிகளையும் வனாந்தரங்களையும் மலைகளையும் கடந்து மான்மரைகளையும், யானைகளையும் பறவை இனங்களையும் கண்டு களித்து செல்வது மனதிற்கு இதந்தருவதாகும். இது ஒரு பக்தி யாத்திரை எனலாம். ஆனால் இன்று அதிகமானோர் வாகனங்களிலேயே செல்கின்றனர். பிற நாட்டவரும் கதிர்காம விழாவில் பங்கேற்பது அதன் மகத்துவத்தை உணர்த்துவதாகும்.

திருவிழாவின் போது மந்திரப்பெட்டி யானை மீது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. இதற்குள் என்ன இருக்கின்றது என்பது எவருக்கும் தெரியாது. இதுதான் கதிர்காம இரகசியம் எனப்படுகின்றது. இறைவன் மந்திரமும் தந்திரமும் மருந்துமாக உள்ளான் என்பதை இது உணர்த்துகின்றது.

இன்று கதிர்காமத்தில் அமைதியில்லை. அன்றைய அற்புதம் இல்லை. ஆன்மீகமும் குறைந்து விட்டது. இந்துக்களின் வாடை விலகிக் கொண்டிருக்கின்றது. அது ஒரு உல்லாசபுரியாகவும் வியாபார நிலையமாகவும் மாறிக்கொண்டு வருவதும் துரதிஷ்டவசமானது. எனினும் கந்தன் அருள்கட்டி இழுக்கும் தன்மையது.

கதிரமலையில் களிநடம்புரியும் கந்தா
உனக்கிணையேது சொல் குமரா
மதுர இசையொலி மாண்புறு சோலையும்
மாணிக்க கங்கையும் மருவிடும் ஊரா
கோல மயிலூர்ந்து அண்டம் அதிர்ந்திட
ஞாலம் வலம் வரும் ஞான பண்டிதா
வேளை தொறும் நினைத்தொழும் அடியவர்
வினை களைந்திடும் வெற்றி வேலவனே!

**நா. க. சிவராமலிங்கம்**




## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course




20 Years Canadian Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**



EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108

Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER CAHPI Ontario

# Kabul Transit

சரித்திரங்கள் இன்று பெரும் பாலும் திரிக்கப்பட்டவையாகவே உள்ளன. சரித்திர ஆய்வாளரின் பக்க சார்பும் இதற்கு ஒரு காரணம். அண்மைக் காலங்களில் வெளிவந்த பல சரித்திர நூல்களை முன் வைத்து உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டுமாயின், இதற்கு மறுபுறத்தில் உள்ள நூல்களையும் சான்றுகளையும் தேட வேண்டியுள்ளது. ஹிரோசிமா-நாகஷாக்கியில் அமெரிக்க அணு குண்டு எறிந்தமை இரண்டாம் உலகப் போரை நிறுத்துவதற்கு என்ற கருத்தின் மறுபுறம் அவசியம், மக்கள் வாழும் அந்தப் பகுதியில் ஏன் குண்டு வீசப்பட்டது? உலக யுத்தம் தானாகவே முடிவுக்கு வரும் நிலையில் இருந்த பொழுதே இந்தக் குண்டு வீசப்பட்டது. இன்று ஹிரோசிமா - நாகஷாக்கியில் எறிந்த குண்டின் செறிவைவிட அதிகளவு வீச்சம் உள்ள ஆயுதங்கள் ஈராக்கிலும், ஆப்கானிலும் பாவிக்கப்படுகின்றன. இன்னமும் முதல் அணுகுண்டின் தாக்கம் அழியமுன், அமெரிக்கா தனது தொடர்ச்சியை பாவிக்கின்றது.



இவற்றை வெளிப்படுத்தும் வகையில் ஆப்கான், ஈராக் நகரங்களில் பல விவரணத் திரைப்படங்கள் படமாக்கப்பட்டுள்ளன. Kandahar, Osama, The Beauty Academy of Kabul, Flying Down to Kabul, The Kite Runner, Charlie Wilson's War, Tale Of Aurezu - Documentary About Afghanistan,

Afghanistan - JIHAD: Afghanistan's Holy War, At War in Afghanistan போன்ற திரைப்படங்களும், விவரணத் திரைப்படங்களும் வெளிவந்துள்ளன. இப் படங்கள் ஒவ்வொன்றும் இயக்குனர், கதாசிரியரின் பக்க சார்பையும் வெளிப்படுத்தியுள்ளன. இவற்றிற்கு மாறாக ஆப்கான் மக்கள் மத்தியில் நிலவும் கருத்துக்களையும், அவர்கள் படும் துன்பங்களையும் பதிவு செய்துள்ளது காபூல் ரான்ஸிட் என்ற விவரணத் திரைப்படம். இப்படத்தை படைத்தோர் மூவர். Edwards, a tyro filmmaker, மனித இன ஆய்வாளர் (anthropologist) வில்லியம் கல்லூரியல் ஆப்கான் பற்றிய வல்லுனர் (expert on Afghanistan at Williams College,) vet filmmaker/editor Whitmore, Afghan-born producer Maliha Zulfacar.

சிறுவர்களும், பெரியவர்களும் பட்டம் விடுதலுடன் இப்படம் ஆரம்பிக்கின்றது. கைட் ரன்னர் படத்தைப் போல் என்று நினைத்தால் அது தவறாகிவிடுகின்றது. காபூல் நகர வீதிகளுக்குள் காமரா நகருகின்றது. கனடிய படைகள் வறுமை நிரம்பிய பகுதி ஒன்றில் கால்வாய் கட்டுவதற்கு உதவி செய்கின்றது. டொலர் மாற்று விற்பனையாளர்கள் தங்களது வியாபாரத்தை பெருக்கும் முயற்சியில் உள்ளார்கள். இதன் தயாரிப்பாளர் கூறிவதைப் போல் இவர்கள் எந்த முன் நோக்கமும் இன்றி காபூல் நகர வீதிகளில் மக்களின் கருத்துக்களை கேட்டுள்ளார்கள். இதனால் இந்த விவரணத் திரைப்படம் ஒரு முழுமையற்றதைப் போல் தோன்றுகின்றது. ஆனால் அதுதான் படத்தின் உண்மைக்கான நம்பிக்கையை அளிக்கின்றது. கடந்த 40 ஆண்டு காலமாக போரையே சந்திக்கும் இம் மக்கள், போரை அடியோடு வெறுப்பதை காணலாம். காபூல் வெளிநாட்டுப் படைகளின் சந்தை போல் காட்சியளிக்கின்றது. குறிப்பாக காபூல் நகர மக்களில் வெறும் ஆறு வீதமான மக்களுக்கே குடி நீர் வசதியும், மின்சார வசதியும் கிடைக்கின்றது. மக்கள் அபிவிருத்தி மாற்றங்களை காணவில்லை. ஆப்கான் பல்கலைக்கழக மாணவிகள் அளித்த கருத்துக்கள் பல கேள்விகளை எழுப்புகின்றது. “பெண்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. வெளி உலகுக்கு காட்டுவதற்காகவே பெண்கள் உரிமை என பேசப்படுகின்றன. சூப் தயாரிக்கும் முறையை சொல்லிக் கொடுப்பதன் மூலம் எமது பிரச்சிகளை தீர்க்கமுடியாது. இவர்கள் கூறும் ஆலோசனைகள் அனைத்தும் பெண்களை அமைதிப்பவை. “பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் பெறும் பணம், அவர்களது செலவிற்கே பயன்படுத்தப்படுகின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் அங்கொன்றும், இங்கொன்றாகவும், சமையல் வகுப்புக்களும், மரம் நாட்டலுமே இடம் பெறுகின்றன” “எங்களது முக்கிய பிரச்சினையின் அடிப்படையே இவர்களுக்கு தெரியாது”, “பெண்கள், சிறுவர்கள் அனைவரும் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்” என்றனர்.

# தூறல்

## வானரன்

Approximately 40% to 60% of the nation's 6 - to - 24 month-old children at risk of disrupted brain development.
Cause: iron deficiency
An estimated 500,000 Afghan babies born each year with intellectual impairment caused by iodine deficiency in pregnancy.
The deaths of over 50,000 children each year from increased susceptibility to infection.
Cause: vitamin A deficiency.

உலக நாடுகள் கொடுக்கும் பணம் எங்கு செல்கின்றது? போன்ற கேள்விகளையும் இப்படம் எழுப்புகின்றது. இதற்கு உதாரணம் ஈராக் நாட்டில் அமெரிக்க நிறுவனங்கள் செய்யும் குளறுபடிகள் பற்றி எவரும் கேட்பதில்லை. அபிவிருத்திக்கென வரும் பணத்தை பெரும் பாலும் இந்த நிறுவனங்கள் சுருட்டிக் கொள்கின்றன. உதாரணம் Halliburton Group Government Accounting Office சுமார் 58.7 கோடி டொலர் பெறுமதி மிக்க ஈராக் புனரமைக்கும் திட்டத்தை எந்த நிறுவனங்களது போட்டியுமின்றி வழங்கியது. முறைப்படி இதற்கான விளம்பரங்களும், விண்ணப்பங்களும் பெறவில்லை.

1. ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகளுக்கு உணவு, எண்ணெய், வீடு, போக்குவரத்து போன்றனவற்றை ஏற்பாடு செய்வதற்காக சுமார் 8 பில்லியன் டொலர்கள் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதனை சரியாக செய்யாததுடன், சுமார் 40 வீதம் அதிகமாகவும் பெற்றுள்ளது. 42,000 உணவு பொதிகள் வழங்கியதாக அரசிடம் பணம் பெற்ற நிறுவனம், வெறும் 14,000 பொதிகளையே வழங்கியுள்ளது.
2. ஈராக்கில் உற்பத்தியாகும் சோடா (24 போத்தல்கள்) 45 டொலர்கள் ஒரு கேசிற்கு அறவிட்டுள்ளது. ஒரு சலவை பை கழுவுவதற்கு 100 டொலர்கள் அறவிட்டுள்ளது. ஆனால் அங்கு வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு வெறும் 50 சதங்களையே ஒரு மணிக்கு வழங்கியுள்ளது.
3. சுமார் 85,000 ரக்குகள் செயலிழந்துள்ளன.
4. துருக்கி, பிலிப்பைன் தொழிலாளர்களுக்கு எச்சில் பண்டங்களை உணவாக வழங்கியுள்ளது.
5. ஈராக்கின் வட பகுதியில் இருந்து ஏற்றுமதியாகும் எண்ணெய்யின் அளவு பெருமளவு குறைந்துள்ளது. எண்ணெய் கிடங்குகளை அனுமதியற்ற இடங்களில் தோண்டியுள்ளனர். பிழையான முறையில் தோண்டியுள்ளார்கள். ஒரு நாளைக்கு எண்ணெய் ஏற்றுமதி 5 மில்லியன் டொலர்கள். இதனால் ஈராக்குக்கு நட்டம். அப்படியிருந்தும் அமெரிக்கா தொடர்ச்சியாக இவர்களுக்கு பணத்தை வழங்கியுள்ளது.
6. Halliburton went from paying $302 million in company taxes in 1998 to getting an $85 million tax refund in 1999.

ஹலிபேட்டன் போல் பல நிறுவனங்கள் ஆப்கானிலும், ஈராக்கிலும் உள்ளன. போரின் மற்றொரு முகத்தை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது.

ஆப்கானுக்கு அருகில் உள்ள நாடு ஈராக். இங்கு நடக்கும் விடயங்களை பதிவு செய்துள்ளது.

## Iraq the lost generation

என்ற விவரணத்திரைப்படம்.

உண்மையில் ஈராக்கில் என்ன நடக்கின்றது. பல அதிர்ச்சி தரும் தகவல்கள் கிடைத்துள்ளன. பல படித்தவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். உதாரணத்துக்கு 2002ல் 380 பல்கலைக்கழக ஆய்வாளர்கள், 210 சட்டவல்லுனர்கள், நீதிபதிகள், 243 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். கொலை செய்யப்பட்டவர்களில் 95 வீதமானோர் முஸ்லீம் ஆண்கள். மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் எண்ணிக்கை பெருமளவு குறைந்துவிட்டது. பாடசாலைக்கு செல்ல வேண்டிய மாணவர்களில் 30 வீதமானோரே பாடசாலைக்கு செல்கின்றனர். பாடசாலைக்கு செல்லாதவர்களில் பெருவாரியோர் பெண்கள் (74 வீதம்).

| Iraqi Media Professionals Murdered in Iraq 2003 – 2007 | |
|---|---|
| Journalists | 135 |
| Cameramen | 9 |
| Photographers | 5 |
| Administrators | 37 |
| Translators | 12 |
| Drivers | 12 |
| Security guards | 13 |
| Technicians | 10 |
| Total | 243 |

படித்த பல பெண்கள் வேலை இன்மையால், பாலியல் தொழிலாளிகளாக கடமையாற்றுகின்றனர். குறிப்பாக மத்திய தர பெண்கள் பலர் பாலியல் தொழிலாளிகளாக நகரங்களில் வேலை செய்கின்றனர். இதற்கு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பும், அதன் இராணுவ, வர்த்தக பிரதிநிதிகளை சாந்திப்படுத்த வேண்டிய தேவைக்காகவும், அமெரிக்க கலாசார மாற்றம் என்ற பெயரில் இரவு விடுதிகளை நடத்துகின்றனர்.

சிரியாவிற்கு செல்லும் ஈராக்கிய அகதிகள் வேலை செய்யமுடியாது. பாடசாலைக்கு செல்ல முடியாது. கால் இழந்தவர்கள் வேறெங்கும் செல்ல முடியாது. அவர்களது அகதி அந்தஸ்து கோரிக்கையையும் யு.என்.எச்.ஆர் நிராகரித்து விடுகின்றது. இந்நிலையில் இந்த மக்கள் பல இன்னல்களை நாள் தோறும் சந்திக்கின்றனர்.

ஒரு புறம் அமெரிக்கா. இது பாவிக்கும் ஆயுதங்களாலும், குண்டுகளாலும் பிறக்கும் பிள்ளைகளில் பலர் உடல் ஊனமுற்றோராக பிறக்கின்றனர். இது போருக்கு முன்னர் இருந்ததை விட 600 வீதம் அதிகரித்துள்ளது. மறுபுறம் தலிபான். தீவிர முஸ்லீம் குழு. இதன் சட்ட திட்டங்கள் பெண்களை அதிகளவு பாதித்துள்ளது. இந்த விவரணத்திரைப்பட இயக்குனர் ளுயயசஅநநெ முழயனெ அளித்த பேட்டியில் ஆப்கான் அகதிகள் பாகிஸ்தானில் வாழும் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது எனத் தெரிவித்தார். பெரும்பாலான முஸ்லீம் மக்கள், தலிபான் போன்ற தீவிர மத வெறித் தன்மை கொண்டவர்களின் கருத்துக்களை எவ்வாறு அனுமதித்தார்கள்? என்று மேலும் கேள்வி எழுப்புகின்றார். இவர் பாகிஸ்தான் பற்றிய பல விவரணத்திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

இதுவரை சுமார் 93,000 ஈராக்கியர்கள் இப்போரில் உயிரிழந்துள்ளனர். மேற்கத்திய நாடுகள் போர் வீரரின் இழப்பிற்கு காட்டும் அக்கறை பொதுமக்களின் இழப்பிற்கு காட்டுவதில்லை.

Alan Greenspan August 11, 1987 – January 31, 2006 வரை அமெரிக்க மத்திய (Federal Reserve) ன் தலைவராக கடமையாற்றியவர். இவர் வெளியிட்ட கருத்தே மேற்கூறிய “எண்ணெய் சிந்திய இரத்தம்”. இவர் மிகத் தெளிவாக ஈராக் போர் எண்ணெய்க்காக என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். புஸ் நிர்வாகம் 2003 ல் மிகத் துரிதமாக செயல்படத் தொடங்கியது. ஐ.நா சபையை நிர்ப்பந்தித்து, உலக வங்கி – சர்வதேச நாணய நிதியங்களின் அனுசரணையுடன் ஐ.நா சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் 1483 ம் சரத்தை அமுல்படுத்தியது. இதன் பிரகாரம் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் ஈராக் எண்ணெய்க் காசு, ஈராக் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாற்றப்பட்டது. இந்த நிதியை மேற்பார்வை செய்தவர்கள் Paul Bremer; மற்றும் சர்வதேச நாணய நிதிய கணக்காளர்கள்.

**தொடர்ச்சி 18ஆம் பக்கம்**


## For all your Commercial, Official & Residential Moving

- Moving
  (local & long distance)
- Pick- up & delivery
- Courier service




**உங்கள் உள்ளூர் வெளியூர் இடமாற்றத் தேவைகள், பொருட்களை ஓர் இடத்தில் எடுத்து இன்னோர் இடத்தில் கொடுத்தல் போன்றவற்றை பாதுகாப்பாகவும் துரிதமாகவும் இடமாற்றம் செய்ய அழையுங்கள் 416.897.3195**



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 223 June 15, 2008

1. In 15 days 30 men can do the full work.

∴ In 6 days 30 men can do = $\frac{6}{15}$ of the work.

In every 6 days 5 men can do $\frac{1}{15}$ of the work.

As the number of men decreases by 5 after every 6 days

$\frac{6}{15} + \frac{5}{15} + \frac{4}{15} = \frac{15}{15}$ No. of days is 18

2. 2 P Q × 2 = R Q 5 Q ; 7 7 8 × 5 = 4 5 5 6 [illegible]

∴ [illegible] 17

3. $V = \pi r^2 h$, $\frac{dV}{dt} = 2\pi r h \frac{dr}{dt}$ [illegible] $\frac{dh}{dt}$

[Since r is constant.]

$5 = 400\pi \frac{dh}{dt}$ ∴ $\frac{dh}{dt} = \frac{5}{400\pi}$ cm/sec

4. $V = w^2 h$ [w - width, h - Height]

$5000 = w^2 h$ (1). Surface area (SA) $= 2w^2 + 4wh$

$= 2w^2 + 4w \cdot \frac{5000}{w^2} = 2w^2 + \frac{20{,}000}{w}$

Differentiating $SA' = 4w - \frac{20{,}000}{w^2} = \frac{4w^3 - 20{,}000}{w^2}$

For Max or Min $SA' = 0$, ∴ $4w^3 = 20{,}000$, $w^3 = 5000$,

∴ $w = 10\sqrt[3]{5}$, Substituting in (1) $h = 10\sqrt[3]{5}$.

5. No. of ways is 4 × 3 × 3 × 3 × 3 = 324 ways.

## Questions - 225 - July 15, 2008

1. How many words can be made from the letters MATHEMATICS if the A's must be together?

2. How many arrangements of five letters from the word question contain the letter t?

3. The box has a square base, congruent rectangular sides and no top. The volume is [illegible] cm³. What are the dimensions if the total surface area is a minimum?

4. Find the equation of the tangent to [illegible] at (-1, -9)

5. A school's athletic department can send 3 track athletes and 2 field athletes to an upcoming meet. The school has 14 track athletes and 10 field athletes who qualify. Determine how many different teams could be chosen?

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774**


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

Classes available at Scarborough & Stouffville

**CONTACT: 416 - 431- 6774** (Scarborough)

**647.831.0070** (Stouffville)



**SMART TUTOR** (Math & Science)

*Classes by well experienced Tutor - Contact: (416) 278-4742/ (416) 335-1818*

**Grade 5 to Grade University students**

- Math
- Applied & Academic Math
- Advanced Functions
- Physics
- Functions
- Geometry
- Chemistry
- Calculus
- Algebra
- General Science
- Finite
- Homework Help





[redacted]

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


## ஒன்றுகூடல்

இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடி (வண்ணார்பண்ணைக்கு அருகில்) வாழ் கனடா மக்கள் ஒன்று கூடல் ஒன்றை Bruce's Mill Conservation park/Bruce Mill Driving Maple Grove 2 (Kennedy Rd. and Stouville Road) ல் July 19, 2008 ல் நடத்துகின்றனர். ஐயனார் கோவிலடி கனடா வாழ் மக்கள் அனைவரையும் கலந்து உங்கள் உறவினர்கள், நண்பர்களை சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

உங்களது வருகையை திரு. தேவன் 416-491-8326 என்ற தொலை பேசிக்கு அழைத்து, ஆடி 10 ந் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு கௌசி - 416-450-6833, 905-887-7457

# தூறல்

**17ஆம் பக்கத் தொடர்ச்சி**

அமெரிக்கா செய்யும் ஒவ்வொரு துளி அபிவிருத்திக்கும், அமெரிக்கா அளிக்கும் உணவுக்கும், கேளிக்கைகளுக்கும், இந்த எண்ணெய் விற்ற பணம் மேற்கூறிய கணக்காளர்களால் வாரி வழங்கப்பட்டன. இவற்றுடன் அமெரிக்க ஏற்றுமதி, இறக்குமதி வங்கி (U.S. Export-Import Bank (ExIm) வழங்கிய கடன்களுக்கும், வட்டிகளாக இந்த பணம் மீளக் கட்டப்பட்டது. ExIm ஈராக்கில் தனியார் வங்கிகள் இதர நாட்டு வங்கிகள் ஈராக்கின் நிலைமை காரணமாக கொடுக்கப் பயந்த கடன்களை, தனது உப முகவர்கள் மூலமாக வழங்கி வருகின்றது. இந்த உப முகவர்களை தேர்வு செய்தவர்கள் எண்ணெய் விற்பனை முதலைகள், Bechtel and Halliburton ஆகியோர். மற்றொரு உபசாரத்தின் பிரகாரம் எண்ணெய் வருமானம் மூலம் ஈராக் பெறும் வருமானம், அமெரிக்க அரசு, தனியார் நிறுவனங்கள் கொடுக்கும் கடன்களுக்காகவும், சேவைகளுக்காகவும் இந்த நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஈராக்கில் உள்ள அமெரிக்க நிறுவனங்களது நிதிகளும், முதலீடுகளும் பாதுகாக்கப்படுகின்றன. ஈராக் எண்ணெய் கிடங்குகள் அமெரிக்க நிறுவனங்க ளின் கைகளில் உள்ளன. இந்த எண்ணெய் உற்பத்தியில் ஈராக்கியர் சிந்திய இரத்தங்கள் அமெரிக்க பணக்களஞ்சியத்தை நிரப்புகின்றன.

இவ்விரு போர்களும் ஒரு பெரிய முஸ்லீம் சந்ததியையே அளித்துவிட்டது. இதனை இவ்விரு விவரணத்திரைப்படங்களும் பதிவு செய்துள்ளன.

### U.S. Troops and Contractors in Iraq

132,000: Number of U.S. troops in Iraq in January 2007, before President Bush's escalation. [Brookings Institution, Iraq Index, 3/13/08]

155,000: Number of U.S. troops currently in Iraq. [Brookings Institution, Iraq Index, 3/13/08]

140,000: Number of U.S. troops projected to be in Iraq in July 2008. [Associated Press, 2/26/08]

35,000: Number of private security contractors operating in Iraq. [Human Rights First, Private Security Contractors at War]

180,000: Number of private contractors operating in Iraq. [Human Rights First, Private Security Contractors at War]

# “இந்திய சினிமாவுக்கு வழிகாட்டி தமிழ் சினிமாதான்”

## நேர்காணல் - எடிட்டர் மு. காசி விஸ்வநாதன்

தமிழ் திரைப்பட உலகில் மிகவும் பிஸியான, இன்றைய முன்னணி எடிட்டர்களில் ஒருவர் காசி விஸ்வநாதன். கமலஹாசனின் “ஆளவந்தான்” திரைப்படத்தில் எடிட்டராக அறிமுகமான இவர் முதல் படத்திலேயே பல்வேறு விருதுகளை வாங்கிக் குவித்தார். தொடர்து “பம்மல் கே. சம்பந்தம்”, “மொழி” உள்பட கிட்டத்தட்ட இருபத்தைந்து படங்கள் எடிட் செய்துள்ளார். இன்றைய தமிழ் திரையுலகில் எடிட்டிங் துறையின் பங்கு பற்றிய காசி. விஸ்வநாதனுடனான இந்த உரையாடல், தொழில்நுட்பத்தில் தமிழ் திரையுலகம் அடைந்திருக்கும் வளர்ச்சியை ஆச்சரியப்படும் அளவு வெளிப்படுத்துகிறது. இனி காசி. விஸ்வநாதன்..

கேள்வி: உங்கள் ஆரம்பகால திரைப்படத்துறை அனுபவங்களை பற்றி சொல்லுங்க. குறிப்பாக, நீங்கள் எடிட்டிங் கற்றிக்கொண்ட காலகட்டம் பற்றி கேட்கிறோம்?

காசி. விஸ்வநாதன்: நல்லது. நான் 1987இல் திரு. நாராயணன் சார்கிட்ட உதவியாளராக சேர்ந்தேன். நாராயணன் சார் மலையாளத்தில் அப்போது மிகவும் பிஸியான எடிட்டர். ராத்திரி - பகல்னு அவர் அலுவலகத்தில் வேலை நடக்கும். ஐ.வி. சசி, கமல்னு மலையாளத்தின் மிகப் பெரிய இயக்குனர்களின் படங்களை எல்லாம் இவர்தான் எடிட் செய்வார். நாராயணன் சார் மாதிரியான ஒரு மிகப் பெரிய கலைஞனிடம் தொழிலைக் கற்றுக்கொண்டது, அதனாலேயே பெரிய இயக்குனர்களின் படங்களில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது என் பாக்கியம் என்றுதான் சொல்வேன். அவரிடம் எனக்கு எடிட்டிங் கத்துக்கிறது ரொம்ப சுலபமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் அளவுக்கு சுவாரஸ்யமாகவும் இருந்தது. நாராயணன் சார்கிட்ட இருந்த சத்தீஸ் தனியாக வந்து எடிட்டராக பணிபுரிந்தார். அதன்பிறகு, நான் சத்தீஸிடம் உதவி எடிட்டராக சேர்ந்தேன். ஒன்றரை ஆண்டுகள் அவரிடம் பணிபுரிந்தேன். கமல்ஹாசனின் பெரும்பாலான படங்களை சத்தீஸ் தான் எடிட் செய்துள்ளார். இதில், “தேவர் மகன்” தொடங்கி “குருதிபுனல்” வரைக்கும் அவரிடம் இருந்தேன். அதன் பிறகு சிங்கீதம் சினிவாசன் சாரிடம் உதவியாளராக சேர்ந்தேன். இதனால் வேற்று மொழி படங்களில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. கொரியா, அசாமி, வங்காளி மொழிப் படங்களில் வேலை பார்த்தேன். பின்னர் தனியாக வந்து எடிட்டராக வேலை செய்யத் தொடங்கினேன். இரண்டு முறை இந்திய அரசின் தேசிய விருது கிடைத்தது. 1997இல் சிங்கப்பூருக்கு போயிட்டேன். அங்கு வசந்தம் என்ற தொலைக்காட்சி நிறுவனத்தில் எடிட்டராக சேர்ந்து வேலை பார்த்தேன். 1999இல் திரும்பி சென்னைக்கே வந்தேன்.

**- சிவதானு -**

இதற்கு இடையில் கமலஹாசன் சார் இரண்டு, மூன்று முறை என்னைத் தேடியிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். ஆனால், இன்னொரு எடிட்டர் இருக்கும் போது நாம் போவது சரிப்படாது என்று நான் போகலை. “ஆளவந்தான்” படம் தொடங்கிய போது ஆரம்பத்தில் சத்தீஸ் சார்தான் எடிட்டராக இருந்தார். இடையில் கமல் என்னை வற்புறுத்தி அழைத்ததால் சென்றேன். “ஆளவந்தான்” தான் என்னுடைய முதல் தமிழ் படம். அதன்பிறகு, “பம்மல் கே. சம்பந்தம்” படத்தில் கமல்ஹாசனுடன் வேலை பார்த்தேன். தொடர்ந்து “அன்பே சிவம்” படத்துக்கும் என்னை அழைத்தார். ஆனால், இதற்கிடையில் நான் தாணு சார் படத்துக்கு ஒப்புக்கொண்டுவிட்டேன். எனவே, என்னால் அந்தப் படத்தில் பணியாற்ற முடியவில்லை. மேலும், தாணு சாருக்கும் கமல் சாருக்கும் அப்போது சரியான உறவு இல்லை. இந்த நேரத்தில் அவரிடம் இருந்து பிரிந்து இவரிடம் வந்தால், அது இன்னும் பிரச்சினையை அதிகமாக்கும். எனவேதான் “அன்பே சிவம்” வாய்ப்பை ஒப்புக்கொள்ளவில்லை. அதன்பிறகு ராதா மோகன், பிரகாஷ்ராஜ் கூட்டில் சில படங்கள் எடிட் செய்தேன்.

இதுவரைக்கும் இருபத்தி மூன்று திரைப்படங்கள் எடிட் செய்திருக்கிறேன். பல்வேறு விருதுகள் வாங்கியாகிவிட்டது. சந்தோசம்.”

கேள்வி: தமிழ் திரையுலகம் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரைக்கும் இன்று ஹாலிவுட்டுடன் ஒப்பிட்டு பேசப்படுகிறது. எடிட்டிங்கில் இந்த முன்னேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது?

காசி. விஸ்வநாதன்: சந்தேகமே இல்லாம மற்ற துறைகளை விட முன்னேறி இருக்குன்னு சொல்லலாம். அதுவும், கமலஹாசன் மாதிரியான சினிமா காதலர்கள் இருக்கும் போது, நாம் எப்படி பின்தங்க முடியும். உலகளவில் என்ன தொழில்நுட்பம் புதிதாக வந்தாலும் உடனே அதை இங்கே கொண்டு வரணும்னு துடிப்பார். அந்த காலத்துல “மூவியாலா” என்கிற கருவியில் எடிட் பண்ணினார்கள். அந்தத் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரைக்கும் எடிட்டருக்கு இரண்டு உதவியாளர்கள் தேவைப்படும். இப்போது “விட் கம்பியூட்டர்”ல எடிட் செய்கிறோம். இதற்கு உதவியாளரே தேவையில்லை. ஒருவரே எல்லாவற்றையும் செய்துவிடலாம்.

இந்திய சினிமாவிலேயே விட்டில் எடிட் செய்த முதல் படம் “மகாநதி”தான். கமல் சாரைப் பத்தி உங்களுக்கே தெரியும். புதுமையா ஏதாவது செய்யணும் என்று எண்ணுவார். நல்லதோ, கெட்டதோ முயற்சிப் பண்ணி பார்ப்பார். அப்போது கமல் சார்தான் “இனி எதிர்காலத்தில் இதுதான் உலக சினிமாவைத் திர்மானிக்கப் போகிறது. கற்றுக்கொள்ளுங்கள்” என்றார். உலகம் முழுக்க விட் தொழில்நுட்பம் அறிமுகமாகி இருந்த புதிது. நாங்கள் “விட்”டில் எடிட் செய்கிறோம் எனக் கேள்விப்பட்டு ஹிந்தி திரைப்பட உலகைச் சேர்ந்த சுபாஷ்கை, ராஜ்குமார் போன்ற பெரிய இயக்குநர்கள் எல்லாம் அந்த சாப்டுவேரை பார்க்க வருவார்கள். “மகாநதி” படம் வந்த பிறகு ஹிந்தி திரையுலகமும் விட்டுக்கு மாறிட்டாங்க. அந்த வகையில் இந்திய சினிமாவுக்கே வழிகாட்டி தமிழ் சினிமாதான். “விட்”டை இந்திய சினிமாவுக்கு அறிமுகம் செய்துவைத்த குழுவில் நானும் இருந்தேன் என்பதில் எனக்குக் கொஞ்சம் பெருமை உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த அளவுக்கு எதிர்காலத்தைச் சேர்ந்த தொழில்நுட்பம் அது.

“மகாநதி” படத்தில்தான் முதன்முதலாக விட்டில் எடிட் செய்வது எப்படி என்பதை நானும் சத்திசும் கற்றுக்கொண்டோம். அதுல நாங்க முழுமையா வேலைக் கற்றுக்கொள்வதற்குள் “மகாநதி” வெளிவந்துவிட்டது. அதனால அந்தப் படத்துல சின்ன, சின்ன தவறுகள் இருக்கும். இப்பவும் “மகாநதி”யைப் பார்க்கும் போது அந்தத் தவறுகள் மனசை உறுத்திக்கொண்டே இருக்கும். “ஐயோ சரியா பண்ணலயேன்னு வருத்தம்” இருக்கும். இன்னும் அந்த குற்ற உணர்ச்சி இருந்துகிட்டேதான் இருக்கு. “விட்” கற்றுக் கொண்டவன் என்ற காரணத்தால தான் சிங்கீதம் சீனிவாசன் சார் என்னை சேர்த்துக்கொண்டார்.

“விட் சாப்டுவேர்” நான்கு பேர்கள் செய்யக்கூடிய வேலையை ஒருத்தரே செய்யக்கூடிய அளவுக்கு, வேலைப் பளுவைக் குறைத்துவிடுகிறது. அந்த காலத்துல “நெகட்டிவ்” வந்த உடனே அதை பிரிக்கணும். இயக்குநரால் “ஓகே” செய்யப்பட்ட காட்சிகள் எல்லாவற்றையும் தனியா எடுக்கணும்.



அதன்பிறகு சவுண்டு செக் செய்து, அப்புறம்தான் எடிட்டிங் மேசைக்கே வரும். இப்போது அப்படியில்லை. படப்பிடிப்பு முடிந்து “ரஸ் காப்பி” கைக்கு வந்தவுடனேயே இரண்டு மணி நேரத்தில் மொத்தப் படமும் முடிந்துவிடும். நான்கு டேக் எடுத்திருப்பார்கள். அதில் ஒன்று அல்லது மூன்றாவதை ஒகே சொல்லியிருப்பார்கள். அப்போது இரண்டும் நான்கும் விரயம்தான். அதில் சில பிரமாதமான நுட்பமான பதிவுகள் இருக்கிறது என்று தெரிந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. “விட்”டில் அப்படி இல்லை. நான்கு டேக்கையும் பார்த்து, எந்தெந்த காட்சி தேவையோ அதைமட்டும் தனியாக பிரித்து எடுத்துக் கொள்ளலாம். இவ்வளவு நுட்பங்கள் கூடியிருக்கிறது. ஆனால், வேலை நேரம் குறைந்துவிட்டது. இதுதான் “விட்”டிப் சிறப்பு.”

கேள்வி: ஆனால், இவ்வளவு குறைவான நேரத்தில் ஒரு படத்தை முடித்துவிட முடியும்போது நீங்கள் நிறையப் படங்கள் செய்யலாமே. அப்படி நிறையப் படங்கள் செய்வது மாதிரி தெரியவில்லையே?

காசி. விஸ்வநாதன்: உண்மைதான். நிறைய பேர் என்னை அணுகவும் செய்கிறார்கள். ஆனால், எல்லாப் படங்களையும் நான் ஒப்புக் கொள்வதில்லை. எடிட்டிங் முழுக்க தொழில் நுட்பம் சார்ந்த ஒரு வேலைதான் என்றாலும்,

**தொடர்ச்சி 25ஆம் பக்கம்**

**APARTMENTS FOR RENT**



***In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

## BASEMENT RENT

**Middlefield & McNicolL**
2 Bedroom walk- out bsmt. apt. for rent. Sep.entrance. Living room, large kitchen. Close to temples, schools & shops.
தொடர்புகளுக்கு: 416.293.1401

**BELLAMY & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Avail. immediately. Close to bus stop, stores, school, etc.
வயதானவர்கள் விரும்பத்தக்கது.
416.732.0623 / 416.439.8979

**NEILSON & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry, utilities. Close to ttc, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.3713

**MARKHAM & DENISON**
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to bus, school, canadian Tire, Food basic, etc.
தொடர்புகளுக்கு: 647.868.2131

**MIDDLEFIELD & DENISON**
2 bedroom bsmt apt. for rent. New house. Living room. Sep. entrance. Cable, parking, laundry. Room with attached washroom & meals if required in the main floor.
416.939.8656 / 905.471.5047

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom walk-out bsmt in Town house for rent. Behind highland farm. Cable & laundry. Close to TTC, Stores & HWY 401. Avail immediately. Couple ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.885.4238

**Neilson & Finch**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, full washroom, kitchen, free internet & cable. Close to TTC, mall, school. Avail. immediately.
416.832.3977/647.887.3977

**McCowAn & Elson**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, kitchen, living room, full washroom. Close to TTC & mall, School. Avail. immediately Ladies or couple preferred
416.837.0653/416.321.0336

**Brimley & Eglinton**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking. Utilities. Close to all amenities. Avail. August 1st.
416.757.3830/647.893.3830

**Kennedy & Eglinton**
On Kennedy
2 Bedroom bsmt for rent. Sep.entrance. Full washroom, parking, laundry. Avail. August 1st, 08. Close to bus, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.285.4695

**McCowan & Elson**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. September 1st, 08.
தொடர்புகளுக்கு: 416.737.3891

**MARKHAM & BRIMORTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Close to ttc, school, plaza, etc.
தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.289.6977

**McCowan & Finch**
1 Bedroom large bsmt. apt. for rent. Sep. entrance. Cable, laundry, full washroom. Close to bus, mall, school. All facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.629.2472

**WARDEN & SHEPPARD**
Newly renovated 1 bedroom walk-out bsmt apt. for rent. Bright & Spacious bsmt. Conveniently located, great condition. Close to TTC, schools, parks, stores. Family preferred. Avail. immediately.
416. 496-0050 /416.458.6012

**Morningside & SewelLs**
1 Bedroom walk-out bsmt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Immediately. Family preferred. Close to ttc, school, stores, etc.
416.281.2509/416.473.7518

**MIDDLEFIELD & DENISON**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to buses, schools, stores...
தொடர்புகளுக்கு: 905.201.4812

**Kennedy & Eglinton**
ஒரு அறை bsmt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Convenient location. சகல வசதிகளும் கொண்டது. Living room, kitchen, stove, fridge, parking. Suitable for single or small family. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.264.3899

**FINCH & MIDDLEFIELD**
2 bedroom walk-out bsmt Apt. for rent. Parking, laundry. Avail. immediately. Close to bus, stores, school, temple, etc.
தொடர்புகளுக்கு: 416.918.5872

**KENNEDY & FINCH**
Basement இல் ஒரு அறையும், மேல்தளத்தில் ஒரு அறையும் வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு. வாடகை பேசித்தீர்க்கப்படும்.
416.828.6497 / 416.269.4654

**MCCOWAN & STEELES**
2 large Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, parking, cable. Close to School, stores, bus.
தொடர்புகளுக்கு: 416.419.5790

**MORRIS & ELLESMERE**
2Bedroom bsmt for rent. Sep. Ententrance, parking, cable, washer, dryer. Close to bus, school, etc. Avail. immediately.
416.283.7861 / 416.846.4382

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Avail. July 01, 08. Close to bus, stores, school.
416.826.7015 / 416.648.1267

**WARDEN & FINCH**
Newly Renovated 2 Bedroom bsmt. apt. for rent. 5 years old house. Sep.ent. Sep. entrance. Parking, Sep. washer & dryer. Close to Sir Earnest MCMillan & Beverly Glen Schools, mall & bus. Avail. August 01, 08.
தொடர்புகளுக்கு: 416.494.0850

**McLevin & Neilson**
